தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்

பம்பையே வாங்குங்கள்



பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper


# உதயன்


விலை ரூ2/50



When only The best is Good Enough



Buy
Solide Pumps



சுடர்: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 16 உ திங்கட்கிழமை 23 ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை (29 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-147


# புத்தளம் முஸ்லிம்கள் ஆட்சேப பேரணி

## இன்று கொழும்பு நோக்கி வருவார்கள்

கொழும்பு, மே 29

புத்தளம் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் இன்று பெரும் ஆட்சேப பேரணி ஒன்றை நடத்த இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறைப் பகுதிச் சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணியை கொழும்பு நோக்கி நடத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது

சம்மாந்துறை, கல்முனைச் சம்பவங்களில் முஸ்லிம் மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தும்—

இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் இலங்கை அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும் எனக் கோரியும்—

கிழக்கு மாகாணத்தின் பாது காப்புப் பொறுப்பு இந்திய அமைதிப்படையிடம் இருந்து நீக்கப்படவேண்டும் எனக் கோரியும்—

தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்கும் நடவடிக்கைகளுக்கு இரு சாராரும் உடந்தையாகக் கூடாது எனக் கோரியும்—

பிரஸ்தாப ஆட்சேப ஊர்வலத்தை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

டாக்டர் இம்தியாஸ் இந்த ஆட்சேப ஊர்வலத்துக்கு தலைமைவகித்து நடத்த இருக்கிறார். (அ-1)

## முச்சந்தி முரளி



சேமலாப நிதியைப் படாத பாடு படுத்துகினமோ பின்னை ......! பென்ஷன் என்கினம் கடன் என்கினம்......! எது சரியாய் நடக்கப்போகுதோ தெரியாது......!

## மூன்று மாதங்களுக்கு கட்டணம் செலுத்தாவிடில் மின் விநியோகம் வெட்டு!

யாழ்ப்பாணம், மே 29

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் மின் பாவனையாளர்கள் மூன்று மாதம் தொடர்ந்து மின் கட்டணம் செலுத்தாது விட்டால் மின் துண்டிப்பு அறிவித்தல் வரும்.

மாநகர சபை வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

ஒரு பாவனையாளர் மூன்று மாதம் பணம் கட்டாவிட்டாலோ அல்லது அவரது வைப்புப் பணத்துக்கு மேலாக மின் கட்டணம் அதிகரித்தாலோ மின் துண்டிப்பு அறிவித்தல் அனுப்பப்படும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3)

## பல்கலைக்கழக வேலை நிறுத்தம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், மே 29

யாழ். பல்கலைக்கழகத்தில் ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

தொழிலாளர்களின் போராட்டத்தின் முன்னேற்றம் குறித்து இன்று காலை பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் விளக்கம் அளிக்கப்படும் என்று தொழிற் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஊழியர்கள் சம்மேளனத்தின் வேலை நிறுத்தப் போராட்டத்தின் ஓர் அங்கமாக யாழ். பல்கலைக்கழகத்திலும் வேலை நிறுத்தம் நடைபெற்று வருவது தெரிந்ததே. [ஒ-3]

## ஆரையம்பதி பிரஜைகள் குழு தலைவர் கொலை

மட்டக்களப்பு, மே 29

ஆரையம்பதி பிரஜைகள் குழுத் தலைவரும் ஆரையம்பதி மகாவித்தியாலய அதிபரும் கொத்தணி அதிபருமான இ. கணபதிப்பிள்ளை (வயது 52) சனிக்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-21)

## சாவகச்சேரியில் கடைகள் இன்னும் திறக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மே 29

சாவகச்சேரியில் பூட்டப்பட்ட கடைகளைத் திறந்து பார்ப்பதற்கு சனிக்கிழமை அனுமதி அளிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் கடந்த வாரம் முதல் கடைகள் யாவும் மூடப்பட்டுக் கிடக்கின்றன,

சனிக்கிழமை கடைகளைத் திறந்து பார்க்க உரிமையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். கடைகளைத் திறந்து பார்த்த பின் அவர்கள் தமது கடைகளை மூடிச்சென்றனர். (ஒ-3)

## சீன மாணவர் போராட்டம் ஒத்திவைப்பு

பீகிங், மே 29

கடந்த இரண்டு வாரங்களாக போராட்டம் நடத்தி வரும் சீன மாணவர்கள் வருகிற புதன்கிழமை முதல் கல்லூரிகளுக்குத் திரும்பப் போவதாக அறிவித்துள்ளனர்.

போராட்டத்தை நாளை செவ்வாய்க்கிழமை முதல் தற்காலிகமாக ஒத்திவைக்கப் போவதாக எடுக்கப்பட்டுள்ள முடிவு, ஜனநாயக உரிமைகளை தாரைவார்ப்பதாகாது என்று சீன மாணவர்கள் அறிவித்தனர். (அ-எ)

## பளை நகரில்

பளை நகர்ப் பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அருகில் உள்ள முகாமில் தமது கையொப்பத்தை இட்ட பின்னரே கடைகளைத் திறக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

இதனால் காலை ஒன்பது மணிக்குப் பின்னரே கடைகளைத் திறக்கக் கூடியதாக உள்ளதென தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## பொல்காவலையில் எரிந்த இரு சடலங்கள்

எரிந்த சடலங்கள் இரண்டு பொல்காவலை நகரில் பண்டாரநாயக்கா மாவத்தையில் கடந்த சனிக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டது.

'கழுகு இயக்கம்' இக் கொலைகளுக்கு உரிமை கோரியுள்ளது. (ஒ-எ)

# சம்மாந்துறையில் பூரண அமைதி எனினும் அலுவல்கள் ஸ்தம்பிதம்

மட்டக்களப்பு. மே 29

கடந்த நான்கு தினங்களாக சம்மாந்துறையில் அமைதி நிலவுகிறது.

எனினும் அரச திணைக்களங்கள், வங்கிகள். பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

இவற்றை இன்று திங்கட்கிழமை திறந்து இயங்கவைப்பதற்கு தமிழ் - முஸ்லிம் பிரமுகர்கள் முயன்று வருகின்றனர்.

மக்கள் மத்தியில் அச்சநிலை இன்றும் தொடர்வதாக எமது மட்டக்களப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார். (இ-21)

## டாக்டர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 29

கடுகண்ணாவை பொலிஸ்பகுதியில் டாக்டர் பெர்னாண்டோ என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பமுணுவ என்னும் இடத்தில் உள்ள தனது வீட்டில் இருந்தபோதே அவர் சுடப்பட்டார். (ஒ-எ)

## ஏழாலையில் மோதல்கள்

யாழ்ப்பாணம், மே: 29

ஏழாலை, மயிலங்காட்டுப் பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூட்டு மோதல் சம்பவங்கள் சில இடம்பெற்றதாக அறிய வந்தது.

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மாலை ஒருவர் அப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் எதிரொலியாக மற்றும் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

அவற்றின் பின் விளைவாக, முதலில் கொலையுண்டவரின் மரணச் சடங்கில் துப்பாக்கிச் சூட்டு மோதல் நேற்று இடம் பெற்றது என்றும்- அதன் பின்னர் தொடர்ந்தும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன என்றும் அறிய வந்தது.

## சுபநேரம்

29 — 05 — 1989
வைகாசி — 16
திங்கட்கிழமை

சுபநேரம்:
11:52 முதல் 01:22 வரை
ராகுகாலம்:
07.22 முதல் 08.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
நவமி பிற்பகல் 3.34 வரை

## மாணவர் கைது, காவல்; உத்தரவை மீறும் அதிகாரிகள் மீது இராணுவ விசாரணை!

கொழும்பு, மே 29

மாணவர்களைக் கைது செய்வது, காவலில் வைப்பது சம்பந்தமாக அரசின் உத்தரவுகளை செயற்படுத்தத் தவறும் இராணுவ அதிகாரிகள் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் மீது இப்போது தினமும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

தவறுகின்ற இராணுவ அதிகாரிகள் மீது விசாரணை நடத்துவதற்காக இராணுவ நீதிமன்று ஒன்றை அமைச்சரவை அண்மையில் நியமித்தது. (ஒ-எ)

## வீடு கட்ட, வீடு திருத்த சேமலாப நிதிப் பணம்

### யாழ். தொழில் திணைக்களத்தில் பத்திரம்

வீடு கட்டவும், திருத்தவும், சேமலாப நிதியில் இருந்து 75 சத வீதமான பணத்தைப் பெறலாம். இந்த வசதி யாழ்ப்பாணத்திலும் நடைமுறைக்கு வருகிறது.

யாழ். தொழில் திணைக்களத்தால் இதற்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகிக்கப் படுகின்றன.

ஒரு ஊழியர் தம் பெயரில் உள்ள சேமலாபநிதியில் உள்ள பணத்தில் 75 சத வீதத்தை, வீடு கட்டவோ அல்லது வீடு திருத்தவோ அல்லது ஈடு மீளவோ பெறுவதற்கு அனுமதிக்க அரசு முன்பு தீர்மானித்திருந்தது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு குழுவின் சிபார்சின் பேரில் ஒருவர் பணம் பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## மாத்தறையில் கண்ணி; 3 சிப்பாய்கள் உட்பட 4 பேர் பலி

கொழும்பு, மே 29

மாத்தறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் மூன்று சிப்பாய்களும் ஒரு சிவில் சாரதியும் கொல்லப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்த இராணுவ வாகனம் கறை தென்னைக்கும் கம்பால என்னும் இடத்துக்கும் இடையே நிலக்கண்ணியில் சிக்கியது. வாகனத்தில் இருந்த அனைவரும் அந்த இடத்திலேயே உயிழந்தனர்.

வாகனம் மரம் ஒன்றில் மோதியது. (ஒ-எ)

## சூறாவளிக்கு 45 பேர் இரை!

புதுடில்லி, மே 29

இந்திய மாநிலமான ஒரிஸ்ஸாவிலும் பங்களாதேஷின் கிழக்குப் பகுதியிலும் நேற்று வீசிய சூறாவளியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்தது.

பங்களாதேஷில் ஒரு லட்சத்துக்கு அதிகமானோரும் ஒரிஸ்ஸாவில் 30 ஆயிரத்துக்கு அதிகமானோரும் வீடிழந்தனர். [அ-எ]

## படகு கவிழ்ந்து 200 பேர் பலி?

பங்களாதேஷில்படகு ஒன்று சூறாவளியில் அகப்பட்டு கவிழ்ந்ததில் 50 பேர் பலியாகினர்.

அந்தப்படகில் பயணம் செய்த இன்னும் 150 பேரின் நிலைமை தெரியவில்லை அவர்களும் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என அச்சப்படுகிறது. (ஒ)

## நகரை கலக்கிய சத்தங்கள்!

குருநகர், மே 29

நேற்று மாலை 5-30 மணிக்குப் பின்னர் யாழ் நகரில் விட்டு விட்டு குண்டுகள் வெடிக்கும் பெரும் சத்தங்கள் கோட்டைப்பக்கமாகக் கேட்டன.

யாழ் கோட்டைக்கு அண்மையில் உள்ள பழைய நூல் நிலையக் கட்டடத்தில் வைத்தே குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

இந்த கட்டடத்தில் மக்கள் தொண்டர் படையினர் முகாமிட்டுள்ளனர். இந்த முகாமில் கண்டெடுக்கப்பட்ட குண்டுகளே இவையாகும். தொடர்ந்து 4 குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன. (ஒ-9-51)

## சாவகச்சேரியில் மீன் வியாபாரி சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மே 29

சாவகச்சேரி மீன் சந்தைக்கு அருகில் வைத்து ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று ஞாயிறு சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் மட்டுவிலைச் சேர்ந்த அடைக்கலம் 35 (வயது) என்றும், மீன் வியாபாரி என்றும் பின்னர் தெரியவந்தது.

## கிழக்கில் அரசுக்கு எதிரான சுவரொட்டிகள்

அம்பாறை, மே 29

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான சுவரொட்டிகள் சம்மாந்துறை, கல்முனை, காரைதீவு ஆகிய பகுதிகளில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ அதிரடிப் படையால் அனுபவித்த இன்னல்கள் போதும்.

★ ஸ்ரீலங்கா அரசே! மொஸாட்டின் உளவாளிகள் வேண்டாம்.

★ 1985 ஏப்பிரலில் நாம் அனுபவித்தது போதும்.

★ ஸ்ரீலங்கா அரசே உனது இராணுவத்தை எமது பகுதிக்குள் அனுப்பாதே.

★ தமிழ் முஸ்லிம் கலவரத்தைத் தூண்டாதே.

★ பொது மக்களுக்கு ஆயுதங்களை வழங்காதே. (இ-14)

## ஜனாதிபதி தேர்தல் மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும்

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனுமீதான பூர்வாங்க ஆட்சேபனை சம்பந்தமான தீர்ப்பை உயர்நீதிமன்றம் இன்று திங்கள் வழங்க உள்ளது,

சுதந்திரக்கட்சித் தலைவியும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவருமான திருமதி பண்டாரநாயக்கா தேர்தல் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்.

முறையாக மனு தாக்கல் செய்யப்படவில்லை என்று ஜனாதிபதி பிரேமதாஸா தரப்பில் பூர்வாங்க ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டது.

அதுகுறித்து நீண்டவிசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. அத்தீர்ப்பே இன்று வழங்கப்படவுள்ளது,

இத்தீர்ப்பு எப்படி அமைகின்றதோ அதைப் பொறுத்தே திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சேபனை மனுவின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும். [ஒ-எ]

## வழிபாட்டுத் தலங்களில் ஆரம்பப் பாடசாலைகள்

### ஜனாதிபதி வெளியிட்ட தகவல்

மத வழிபாட்டுத்தலங்களில் ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பிக்க அமைச்சரவை உபகமிட்டி சிபார்சு செய்துவிட்டது.

இப்பாடசாலைகள் விகாரை, பள்ளிவாசல், இந்து ஆலயங்கள் கிறிஸ்தவாலயங்கள் ஆகியவற்றில் அமைக்கப்படும்.

இப்பாடசாலைகளை நிர்வகிக்க கிராம மட்டத்தில் ஆளுநர் சபைகள் நியமிக்கப்படும்.

இப்பாடசாலைகளை நிர்வகிக்க என நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நம்பிக்கை நிதியம் ஒன்று நிறுவப்படும்.

இத்தகவல்களை ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று மாலை பாமன்கடையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்தார். (அ-எ)

## தண்ணீரூற்றில் சூடு! முஸ்லிம் மாணவன் காயம்

தண்ணீரூற்றுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அமைதிப் படையினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஆயுதங்களுடன் சென்றதாகக் கூறப்பட்ட சிலர் மீதே சுடப்பட்டதாகவும் ஆனால் அவர்கள் எவ்வித காயமும் இன்றித் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் தெரியவருகிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் எதிரொலியாக வீடு ஒன்றுக்குள் இருந்த சத்தார் என்னும் முஸ்லிம் மாணவன் காயமுற்றார். துப்பாக்கிக் குண்டுகள் முகத்தினூடாக பாய்ந்த நிலையில் இவர் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-94)

## நட்புறவு ஒப்பந்தம்: இந்தியா அக்கறையில்லை

கொழும்பு, மே 29

உத்தேச இலங்கை-இந்திய நட்புறவு உடன்படிக்கை தொடர்பாக இந்தியா இன்னும் அக்கறை காட்டவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தியா இது குறித்து மௌனம் சாதித்து வந்த போதிலும் இலங்கை அரசு இந்தியாவின் பதிலை அக்கறையாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நட்புறவு உடன்படிக்கையின் நகல் ஒன்றை இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்பியது.

நகலை இந்திய அரசு பரி


(8 ஆம் பக்கம் பார்க்க)



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கம்பனிக்கு வெளிக்கள உத்தியோகத்தர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 532, C/o உதயன். (599)

ஆனைப்பந்தியில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் தையல் ஸ்தாபனத்திற்கு மகளிருக்கான ஆடைகள் வெட்டித் தைக்கத்தெரிந்த அனுபவம் வாய்ந்த பெண்கள் உடன் தேவை. கீழ்காணும் விலாசத்திற்கு நேரில் தொடர்பு கொள்ளவும். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. மு. வதனா, C/o மு. இரத்தினம் 83/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (11079)

பழைய உபயோகிக்கப்படாத இரும்பு விலைக்கு வாங்கப்படும். ஒரு கிலோவின் விலையையும், கொடுக்கக்கூடிய அளவையும் உடன் விண்ணப்பிக்கவும். 531, C/o உதயன். (600)

வெயிட்டர் வேலைக்கு நன்கு அனுபவம் வாய்ந்தவரும் குசினி வேலையில் அனுபவமிக்கவரும் தேவை. தொடர்பு றிக்கோ ஹோட்டல் 370 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [584]

### சமையற்காரர் தேவை

பலவிதமான சிற்றுண்டி வகைகள் தயாரிக்கத் தெரிந்த திறமையான சமையற்காரர் தேவை. இடியப்பம், தோசை, ரொட்டி வேலை தெரிந்த சமையற்காரரும் 15 வயதிற்குட்பட்ட வெயிற்றர்களும் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும், எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறிப்பிடவும். விளம்பர இல. 64, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [11035]

### தவறிய பொருள்

25-05-89இல் என்னிடம் தலைநகை செற் வாடகைக்கு எடுத்தவர்கள் தவறுதலாக தலைநகை பெட்டிக்குள் ஒரு தங்கப் பதக்கத்தையும் வைத்துத் தந்துவிட்டார்கள். சம்பந்தப்பட்டவர்கள் கீழ்க் காணும் முகவரியில் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். கனகசபை தர்மகுலசிங்கம், ''கணேஸ் வாசா'', வாரிவளவு, காரைநகர். C/o சித்தி தங்க மாளிகை, 213, C கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (597)

### தவறிவிட்டது

சண்முகராஜா குணேந்திரன் ஆகிய எனது அடையாள அட்டை (622872668 V) 26.05 1989 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11083)

### NEW CITY TRADERS

Daytron T V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate Booster, T V Antennas Pipe fitting& றேடியோ வீடியோ செற் ரெக்கோடர்: ஒ... வீடியோ கசெற், Head T V ... and Film roll கவா... ணி கூடுள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturiar Road, Jaffna. [சி/2505]

### வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு யாழ் மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்காக உள்ளது. தொடர்பு: Ratna Motors 55, Stanley Road, Jaffna [591]

### SriRam

பாவித்த T. V. Fridge oven motor, Rice cooker, Cycle, Fish Tank செற்றி செற், கட்டில் மற்றும் புதிய தளபாடங்கள் மலிவுவிலையில். SriRam 3ஆம் கட்டை பருத்தித்துறை வீதி. (11057)

### விற்பனைக்கு

புதிய Audio Deck (Kenwood) விற்பனைக்கு உண்டு. (4 Pices) 2 Speakers) இ. சிறிதாமோதரராஜா மணிவாகினி V. C. ஒழுங்கை கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. மாலை 2.00 மணியிலிருந்து 6.00 மணிவரை பார்வையிடலாம். (587)

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origan Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [571]

நல்ல நிலையிலுள்ள ITALIAN VESPA P150X விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. No. 390, மெயின் வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (11075)

### ஆங்கில வகுப்புக்கள்

O/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும் ஏனைய வகுப்புக்களுக்கும் விசேட ஆங்கில வகுப்புக்கள் 3.6.1989 இல் ஆரம்பமாகின்றன. ஆசிரியர்: K. மூர்த்தி. தொடர்பு: நாகேந்திரம், 34/4, செட்டித்தெரு, நல்லூர். (588)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனை மற்றும் நகைகள் வாடகைக்குப் பெற்று கொள்ள நாடுங்கள்; கனகசபை தர்மகுலசிங்கம் ''கணேஸ் வாசா'' வாரிவளவு காரைநகர். C/o சித்தி தங்க மாளிகை, 213, C கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (596)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் 30. 05. 89 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [570]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hylline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

## இலவச வகுப்புகள்

குருநகர். மே, 29

குருநகர் பகுதி மாணவ-மாணவிகளது கல்வி வளர்ச்சியைப் பெருக்கும் பொருட்டு குருநகர் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பினால் நடத்தப்பட்டு வந்த மாலை நேர இலவச வகுப்புகள் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன.

புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் இம் மாதம் 2 ஆம் திகதியில் இருந்து தினமும் மாலை நேர வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. (ச - 51)

## பாத யாத்திரை

யாழ்ப்பாணம், மே 30.

ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையிலான திருத்தல யாத்திரை ஒன்று யூன் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் வலி கிழக்கில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த யாத்திரை உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் ஆரம்பமாகி வலி கிழக்கிலுள்ள ஆலயங்கள் அனைத்தையும் தரிசித்து கோப்பாய் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் முடிவு அடையும் என அறியப்படுகின்றது. [க]



# Professional Exams

| | | | Commencement |
|---|---|---|---|
| C. I. M. A. | Stage 1 | | 3 - 6 - 89 |
| | Stage 2 | | 10 - 6 - 89 |
| I. D. P. M. | Part 1 | | 3 - 6 - 89 |
| | Part 2 | | 17 - 6 - 89 |
| A. A. T. (Sri Lanka) | Stage 1 | | 3 - 6 - 89 |
| BOOK-KEEPING | (Pitmans) | | 5 - 6 - 89 |
| COMPUTER | (Basic) | | 27 - 5 - 89 |

An Electronic Calculator will be Issued FREE for CIMA & IDPM Students

Panel of Lecturers include:
JEYARATNAM, KAILAYAPILLAI, KATHIRGAMANATHAN, NAVARENDRAN, PUSHPA, SIVAPATHASUNDARAM.
& CAMPUS LECTURERS

NOTE; I. D. P. M. & I. A. B. Exams will be held in Jaffna Centre

- ★ Qualified, Experienced & dedicated Panel of Lecturers
- ★ Free Cyclostyled Notes
- ★ Moderate Fees
- ★ Registration with London Institutes will be handled by us

Pay only Rs 100/- on admission, Satisfy yourself about our standard of lectures and pay the balance fees later

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION,**
(Pioneers in Accountancy Studies)
16, 3rd CROSS STRT,
(Near O. L. R. Church)
JAFFNA. [சி/2762]

## மாணவர்களே!!!

உங்கள் இதயம் கவர்ந்த கல்வி நிறுவனத்திலே ஆரம்பமாகின்றன

**CIMA - IDPM - AAT - IAB**
**PITMANS BOOK-KEEPING**

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 03-06-1989

தகைமை, திறமை, ஆற்றல், அனுபவம், கடமை, கண்ணியம் எல்லாம் ஒருங்கே பொருந்திய போதனையில் சாதனை புரியும் முன்னணி விரிவுரையாளர் களைக் கொண்ட கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்:

# CANTABIA INSTITUTE

No. 21, Main Street,
JAFFNA. [சி-2761]



## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
# கேள்வி அறிவித்தல் - 1989

எமது 17-04-89 ஆம் திகதிய அறிவித்தலைத் தொடர்ந்து கீழ்க்காணும் இறைச்சிக் கடை, கருவாட்டுக்கடை ஆகியவற்றுக்கான அரசுக் குத்தகையிடப்பட்ட கேள்விகள் 09-06 89 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். குத்தகைக் கான காலம் 15-06-89 தொடக்கம் 31-12-89 வரையிலானதாகும். விண்ணப்பப் படிவங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையின் விசேட ஆணையாளரினால் கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 07-06-89 ஆம் திகதி நண்பகல் 12. மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். ஏனைய விபரங்களையும், நிபந்தனைகளையும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்.

வலி- தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 26-05-1989.

| | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட பணம் |
|---|---|---|---|---|
| 1. | ஆட்டிறைச்சிக் கடை (சுன்னாகம் மீன்சந்தை) | 100/- | 500/- | 25, 000/- |
| 2. | கருவாட்டுக் கடை இல. 3 | 25/- | 100/- | 1, 000/- |
| 3. | கருவாட்டுக் கடை இல. 5 | 25/- | 100/- | 1, 000/- |
| 4. | கருவாட்டுக் கடை ... | 25/- | 100/- | 1, 000/- |

(சி/2668)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்
### அமரர் திரு. கணபதி சித்தன்

மண்ணுலகு: 20 04. 1917 விண்ணுலகு: 11. 05. 1988

திதி: 29.05.1989

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவரையும் நல்வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்று ஒரு வருடமானாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் இதயத்தில் அணையாத தீபமாக ஒளி வீசிக்கொண்டேயிருக்கும். தங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன் பேத்திமார்கள்.

நாவலம் பதி,
அச்சுவேலி. (698)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



நடராசா சிவகௌரி (கௌரி)

அன்னையின் மடியில்: 01 - 01 - 1980
ஆண்டவன் அழைப்பில்: 19 - 04 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின் ஊற்றாய் அறிவுச்சுடராய் பாசத்தின் உறைவிடமாய் எம்மிடையே கலகலத்துச் சிரித்த உன் பூ முகம் காணாது தவிக்கின்றோம்.

எங்கள் அன்புச் செல்வத்தின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 29 - 05 - 1989. இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா
அக்கா, அம்மப்பா, அம்மம்மா,
மாமன்மார்.

கருமாரி மோட்டோர்ஸ் (யாழ்ப்பாணம்),
தென்மயிலை,
தெல்லிப்பழை. (11087)

## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



கனகசபை லோகேஸ்வரன் [வடிவு]

தாயின் மடியில்: 10 - 09 - 1971 ஆண்டவன் அடியில்: 30 - 05 - 1987

எங்கள் அருமை சகோதரனே உமது தாயைக் கூடப் பிரிந்து நாடு தான் உம் தாய் என்று சென்றீர்! ஆனால் காலனவன் உம்மை வேண்டி தன்னுடன் அணைத்துவிட்டான்! எம் தாயின் மடியில் இவ்வாறு வந்து பிறந்தோம். ஆனால் இவரில் உன்னோடு ஒப்பிட்டால் நாம் நால்வரும் உன் முன்னே கோழைகள். எனினும் உனது எண்ணங்கள் அழியாத கோலங்கள். உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு
தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
(699)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழைஆஸ்பத்திரியில்

# இருதய நோயாளர் பாதிப்பு

## 6 மாத காலமாக ஊசிமருந்து தட்டுப்பாடு

காங்கேசன் துறை மே. 29

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் இருதய நோயாளர்களுக்கு ஏற்றப்படும் ''பென்சதீன் பென்சிலின்'' ஊசி மருந்துக்குக் கடந்த 6 மாத காலமாகத் தட்டுப்பாடு நிலவுவதால் 300க்கு மேற்பட்ட இருதய நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புகார் கூறப்படுகிறது.

மேற்படி ஆஸ்பத்திரியில் மாதாந்தம் 300 க்கு மேற்பட்ட இருதய நோயாளர்களுக்கு ''பென்சதீன் பென்சிலின்'' ஊசி ஏற்றப்பட்டு வந்தது.

மாதந்தோறும் தவறாது இந்த ஊசி மருந்தை ஏற்ற வேண்டுமென வைத்திய அதிகாரிகள் வழங்கிய ஆலோசனைக்கமையவே இருதய நோயாளர்கள் இந்த ஊசி மருந்தை ஏற்றி வந்தனர்.

ஆனால் கடந்த 6 மாத காலமாக பிரஸ்தாப ஆஸ்பத்திரியில் இந்த ஊசி மருந்து இல்லை எனக் கையை விரிப்பதால் இருதய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. (இ - 68)

# ஊழியர்களின் பிரச்சினைகளை

## மனிதாபிமானத்தோடு அணுகியவர்

### பிரிவுபசார வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 29

''ஆன்மீக உணர்வும் வாழ்க்கை பற்றிய தெளிவான சிந்தனையும் உடையவர் திரு. எஸ். வெற்றிவேலு. இவர் தமது சேவைக்காலத்தில் ஒரு உண்மையான அரசாங்க ஊழியராகப் பணியாற்றினார். அலுவலகத்திற்கு வருகின்ற ஊழியர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு அணுகினார். இவருக்கும் எமக்கும் ஏதோ ஒருவகையில் உள்ளார்ந்த ஒருமைப்பாடு காணப்பட்டதாலேயே இன்று இந்தப் பிரிவுபசார வைபவம் சிறப்பாக நடைபெறுகின்றது''.

அஞ்சல் திணைக்களத்தின் யாழ். பிரதேச நிர்வாக அலுவலகத்தில் நிர்வாக உதவியாளராகப் பணியாற்றிய இளைப்பாறிய திரு. சி.வெற்றிவேலுவைக் கௌரவிக்கும் முகமாக அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் உரையாற்றிய யாழ். பிரதேச கணக்காளர் (அஞ்சல் திணைக்களம்) திரு. எஸ், சிவபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய நிர்வாக உதவியாளரும் எழுத்தாளருமான திரு. நெல்லை. க. பேரன் பேசுகையில் 'இன்றைய காலகட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் செவ்வனவே கடமை செய்கிறார்களா என்பதைக் கண்காணிப்பது அவர்களது மனச்சாட்சியே தவிர வேறு ஒன்றும் இல்லை.

பதவியில் இருப்பவர்களுக்கு ஏனைய கீழ்த்தர உத்தியோகத்தர்கள் மதிப்பும் கௌரவமும் கொடுப்பது வெகுவாகக் குறைந்து விட்டது. பதவிகளில் இருப்பவர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் இடையில் உள்ள உறவு நிலையில் பெரிய இடைவெளிகள் இருப்பதே இதற்குக் காரணம். நிதிப்பிரமாணங்கள், நிர்வாக ஒழுங்குமுறைகள் என்ற சிவப்பு நாடாக்களை ஒதுக்கி வைத்துவிட்டு உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகினால் பல சிக்கல்கள் குறையும்.

இப்படி அவர் கூறினார்.

திரு. வெற்றிவேலுவின் சேவையைப் பாராட்டி அஞ்சல் திணைக்கள பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் திரு. அ.சிவரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடும் கிருஷ்ணர் வழிபாட்டில் விருப்பமும் கொண்ட திரு. வெற்றிவேலுவின் விருப்பப்படி உத்தியோகத்தர்கள் சார்பாக இவருக்குக் கண்ணன் - ராதை உருவச் சிலையும் மற்றும் பொருள்களும் அன்பளிப்புகளாக வழங்கப்பட்டன.

திரு. சி. வெற்றிவேலு நன்றி தெரிவித்துப் பேசினார். (இ)

# யாழ்.நகர புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 29

யாழ் - நகரப் புனரமைப்புக்கு 22 கோடியே 10 லட்சம் ரூபாவை ஒதுக்க வடக்கு-கிழக்கு மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தலைமையில் இயங்கும் வடக்கு-கிழக்கு மாகாண புனரமைப்பு நெறிப்படுத்தல் குழு யாழ். நகர வீதிகளை புனரமைக்க 90 லட்சம் ரூபாவையும், வடிகால் புனரமைப்புக்கு 12 லட்சம் ரூபாவையும், மின்சாரம் வழங்குவதற்கும் வீதிகளில் மின்விளக்குகளைப் பொருத்துவதற்கும் 18 லட்சம் ரூபாவையும் செலவிட தீர்மானித்துள்ளது.

மேலும் 40,000 ரூபா செலவில் வவுனியா இந்து இளைஞர் மன்ற கட்டடத்தைப் புனரமைக்கவும் மேற்படிக் குழு தீர்மானித்துள்ளது. (க)

ஜனசக்தித் திட்டத்தின் கீழ்

# பால், முட்டை, மீன் மற்றும் சட்டி, பானை வழங்கத் திட்டம்

கொழும்பு, மே 29

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களுக்குப் பால், முட்டை, மீன் தயிர், காய்கறி, பழவகைகள் ஆகியவற்றுடன் தும்புத் தடி, சட்டி, பானை, சப்பாத்து, குடை, நுளம்பு வலை ஆகியனவும் வழங்கப்படும்.

ஜனசக்தித் திட்டத்திற்குப் பொறுப்பான சமூக அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் திரு. சுசில் சிறிவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் உதவி பெறும் குடும்பங்களுக்கு 25 வகையான உணவுப் பொருள்களும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் வழங்கப்படும்.

இவற்றில் மண்ணெண்ணெய், விட்டா மில்க், குழந்தைகள் பால்மா தவிர்ந்த ஏனைய பொருள்கள் அனைத்தும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுபவையாகும் என்றும் திரு. சிறிவர்த்தன தெரிவித்தார். (இ-எ)

# மனிதப் பண்புகளை வளர்ப்பதில் கல்விக்குப் பெரிய பங்குண்டு

### பரிசளிப்பு விழாவில் கல்வி அதிகாரி உரை

மானிப்பாய், மே 29

மனிதப் பண்புகளைவளர்த்து மேலோங்கச் செய்வதில் கல்விக்கு மிகப்பெரிய பங்குண்டு. இன, மத, மொழி உணர்வுகளை ஒழித்து சகோதரத்துவம், சமத்துவம் என்ற மனித நேயங்களை வளர்ப்பது கல்வி. மனிதப் பண்பு ஒன்றுதான் உலகின் ஒரேயொரு மொழி. இதயத்தின் அடித்தளத்தில் இருந்து எழும் தூய அன்பு ஒன்றுதான் உலகின் ஒரே ஒரு மதம். இம்மதத்தையும், மொழியையும் தம் உள்ளத்தே பயிரிட்டு வளர்க்க மாணவப் பருவமே உகந்த காலம்.

நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசுத்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசளிப்புப் பேருரை வழங்கிய யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. தங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

பரிசுத்தின விழாவுக்கு வித்தியாலய அதிபர் திரு. க. மு. மாணிக்கம் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்தியப் பேராசிரியர் திரு. ந. சரவணபவானந்தன் உரையாற்றுகையில்—

'பிறரின் பாதிப்பில் நன்மையடைய விழையாத தொழில் ஆசிரியத் தொழில் ஒன்றுதான்.

நான் ஒரு மருத்துவர் எனக் கூறுவதிலும் பார்க்க ஓர் ஆசிரியன் எனக் கூறுவதிலே மகிழ்வடைகிறேன். ஆசிரியத் தொழிலில் ஈடுபடும்போது ஆன்ம நிறைவுபெற முடிகின்றது எனக் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி பேசுகையில் 'வகுப்பறைக் கல்வியிலே மாத்திரம் முழுக்கவனம் செலுத்துவதோடு அமையாது பாடசாலையிலே பல விழாக்களை ஒழுங்குபடுத்தி மாணவர்களை அதில் பங்கெடுக்கச் செய்வதன்மூலம் மாணவரின் பல்வேறு திறன்களையும் நற்பழக்கங்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

எனது சேவைக் காலத்தில் விழாக்கள் எடுப்பதன் மூலம் மாணவரின் உள ஆற்றல் வெளிப்படுவதையும் வளர்ச்சி பெறுவதையும் அனுபவரீதியாக கண்டுள்ளேன் என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் உரையாற்றுகையில்; 'கல்வியும் ஒழுக்கமும் மாணவரின் இருகண்கள். எனவே கண்ணைப் பாதுகாப்பதுபோல ஒழுக்கத்தையும் கல்வியையும் மாணவர்கள் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்' என்றார்.

செல்வி ச. சதானந்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

பரிசுபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வைத்தியப் பேராசிரியை திருமதி த. சரவணபவானந்தன் வழங்கினார்.

ஆசிரியை திருமதி பொ. சோமராஜேந்திரன் நன்றி கூறினார்.

பரிசுத்த தினத்தை முன்னிட்டு பிற்பகலில் நடனம் இசை நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (ச-90)

# மது, போதைப் பொருள் தடுப்பு கல்வி குறித்து பயிற்சி

## இன்று தொடர்பகத்தில்

யாழ்ப்பாணம், மே 29

மது, போதைப் பொருள் தடுப்புக் கல்விக்கான ஆசிரியர் பயிற்சிப் பாசறை இன்று 29ஆம் திகதி முதல் ஜூன் 2 ஆம் திகதி வரை யாழ் ஆஸ்பத்திரிவீதியில் உள்ள தொடர்பகத்தில் நடத்தப்படவுள்ளது.

இப் பாசறை யாழ் பிராந்திய கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் 'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாசறையில் பல்வேறு துறைகளையும் சேர்ந்த அறிஞர்களும் கருத்துரை வழங்குவர்.

இது போன்ற ஆசிரியருக்கான பயிற்சிப் பாசறைகளை செயற்திட்டம் சர்வதேச நல்லொழுக்க வாலிப சங்கத்தின் அனுசரணையுடன் மதுபோதைப் பொருள்களுக்கான தகவல் நிலையம் உலகின் பல்வேறு பாகங்களிலும் நடத்தி வருகிறது.

பாடசாலைகளில் மது, போதைப்பொருள் பாவனைத் தடுப்பு நடவடிக்கைகளை பாடசாலை மட்டத்தில் இருந்தே ஆரம்பிக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதே ஆசிரிய பயிற்சிப் பாசறைத் திட்டத்தின் நோக்கமாகும். (இ-எ)

# வைத்தீஸ்வராவில் மதிய உணவு

கொக்குவில், மே 29

யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. சி.சரவணபவன் தலைமையில் மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

வித்தியாலத்தின் பழைய மாணவனும் தொழிலதிபருமான திரு. எஸ். தியாகராசா மாணவருக்கு உணவை வழங்கி அதனை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலை அபி. சங்க செயலாளர் திரு. ஏ. சிவமூர்த்தி, பழைய மாணவர் சங்க செயலாளர் திரு. எஸ். நடேஸ்வரன், மற்றும் பாடசாலை அபி. சங்க உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. வி. ஜெயலிங்கநாதன், சுரேந்திரன், கனகராஜன், ஜீவரட்ணம் ஆகியோரும் மாணவருக்கு சம்பிரதாயபூர்வமாக உணவு வழங்கினார்கள். [ச-69]

# பருத்தித்துறை ஆழியவளை பஸ்சேவை

தாளையடி, மே 29

பருத்தித்துறை-ஆழியவளை பஸ் சேவையை நிறுத்திவைக்கும்படி மேலிடத்திலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக பருத்தித்துறை சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# காரைநகர் வீதிகள்

யாழ்ப்பாணம், மே 29

காரைநகர் வடக்கு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நீலப்பந்தனை வீதியும், மருதடிவீதியும் கவனிப்பாரற்றுக் குன்றும் குழியுமாக இருக்கின்றன என அறியவருகின்றது.

இந்தவீதிகளால் லொறிகள் வான்கள், கார்கள், பாரவண்டிகள் ஆகியன செல்வதால் ரோட்டுத்தார் எடுபட்டுள்ளது. (க)

# கோழி நோய் தடுப்பூசி

காங்கேசன்துறை, மே 29

வலி வடக்கில் பல இடங்களில் கோழிகளுக்கு நோய் கண்டு அவை இறப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராம ரீதியில் இயங்கும் பொதுஜனசேவா சங்கங்கள் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்குமாறு வலி. வடக்கு கால்நடை வைத்திய அதிகாரி திருமதி தனபாலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-68)


# சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

ஈழமக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்த மகிழ்ச்சியுடன் அறியத்தருவது எமது ஸ்தாபனம் மூலம் அண்மையில் கனடா, ஜேர்மன் சென்றவர்களின் விபரத்தைப் பத்திரிகையில் பிரசுரமாவதை அவர்கள் விரும்பாததால் தெரிவிக்கவில்லை.

விசேடமாக......

ஜேர்மன் செல்ல விருப்புவோர் மேலதிக விபரத்திற்கு எமது அலுவலகங்களில் விரைவில் பதிவு செய்யவும்

● ஜேர்மன் ● கனடா பயண ஒழுங்குகளுக்கு நம்பிக்கையும் நாணயமும் உத்தரவாதம்.

இந்தியாவில் பிரசித்தி பெற்ற தென்னிந்திய யாத்திரை வெகு விரைவில் ஆரம்பமாகின்றது

உடன் தொடர்பு கொள்ளவும்:-

**ஆன்மாவுக்கு அருள் பிரவாகம்!**

★ பகவான் சத்தியசாயி பாபாவுடன் நேரடி தரிசனம்!
★ இருபதுக்கு மேற்பட்ட தலைசிறந்த சிவன், அம்மன், முருகன், விஷ்ணு ஆலயங்களில் வழிபாடு!

**அறிவிற்கு அரும்பொருள் காட்சிகள்!**

★ வரலாற்று புகழ் மிக்க தொல்பொருள் சான்றுகள்!
★ தற்காலத் தலைவர்களின் நினைவுச் சின்னங்கள்!

**புலன்களுக்குப் பேரின்ப அனுபவம்!**

★ பங்களூர், மைசூர், கொடைக்கானல், ஊட்டி, குற்றாலம் - ரம்மியமான குளு குளு இயற்கைக் காட்சிகள்!
★ தமிழ் நாட்டின் நுண்கலை ஆக்கங்களை நுகரும் வாய்ப்பு!

**உடம்புக்கு உல்லாசம்!**

★ குளிரூட்டப்பட்ட பஸ்களில் மட்டுமே பயணம்!
★ வசதியான தங்குமிடங்கள்!
★ தரமான, சுத்தமான உணவு ஏற்பாடுகள்!

**மனதுக்கு மிக நிம்மதி!**

★ நிதி திட்டமிடல், பாதுகாப்புக் கவலைகளிலிருந்து விடுதலை!

**நினைவிற்கு நிழற் படங்கள்!**

★ இந்த அனுபவங்களை நிரந்தரமாக உங்கள் ஆல்பத்தினுள் அடக்கி விடலாம் - போட்டோகிராபரின் உதவியுடன்.

**இங்ஙனம் பரிபூரண திருப்தி நிச்சயம்**

ஏமாற்றத்தைத் தவிர்க்க விரைவில் உங்கள் பெயர்களை குளிரூட்டப்பட்ட எமது யாழ். கிளையில் பதிவு செய்து கொள்ளுங்கள்!

★ சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் ★

இல: 33, 1ஆம் மாடி, புதிய ஜெமினி கொம்பிளெக்ஸ்,
[ஜெமினி ஸ்ருடியோவை உள்ளடக்கியது]
602, மவுண்ட் ரோட், சென்னை 600006, தமிழ்நாடு.
தொலைபேசி: 475382

24/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
[அரசு அங்கீகாரம் பெற்றது]

★ எமக்கு தரகர்கள் இடையாது. எமது பெயரை துஷ்பிரயோகம் செய்வோர் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[சி-2760]



கீல்ஸ் (KEELS) ஸ்தாபனத்தின்
பதப்படுத்தப்பட்ட
இறைச்சிவகைகள்




போன்: 22575

ஏகவிநியோகஸ்தர்:
மெடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
26-06-1967

உதிர்வு:
29-05-1987

**விருத்தாசலம் சாந்தலிங்கம்**
**[ஷாம்]**

ஆண்டிரண்டு போனாலும்
அழியாது எம்முடனே
தூண்டா மணி விளக்காய்
தோன்றும் அன்புருவே
மீண்டும் நாம் காண்போமா
மேலான அன்புருவை
வேண்டுகின்றோம் நின் ஆத்மா
விண்ணிலே சாந்தி பெற

பிரிவால் துயருறும்

**ஐயா, அம்மா, அக்கா, அண்ணா, சின்னக்கா, அக்கக்கா, ஈஸ்வரன், அச்சுதன், பார்த்திபன், உறவினர்கள்.**

''லிங்க வாசம்'',
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(684)

## 3 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி ரஜினி பாலசிங்கம்**
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு:
27- 05 1969

உதிர்வு:
31- 05- 1986

திதி: 29- 05- 1989

மலரென்று மலர்ந்து நறுமணம்
வீசுவது போல் உந்தன் நினைவு மலரும்
எங்கள் அனைவரது மனத்திலும்
நீங்காத மணம் வீசுகின்றது மகளே!
பதினாறு ஆண்டுகள் உயிர்துடிப்புள்ள
மலரும் உன்முகம் கண்ட நாங்கள்
இந்த மூன்று ஆண்டுகள் துடிப்பற்ற
உந்தன் நிழற்படம் கண்டு தவியாய்த் தவிக்கின்றோம்
உன் சிரிப்பலைகள் உறங்கிப் போய்விட்டன மகளே!
ஆனால் நினைவலைகள் உறங்கவில்லை!
தாய்க்குத் தலைமகளாய் வீட்டிற்கொரு
பெண் குலவிளக்காய் கண்ணை இமை காப்பது போல்
எமை காத்திடுவாய் எனக் காத்திருந்தோம்!
ஆனால் இதயமதில் இரக்கத்தை
துளியேதும் வைக்காமல்
படைத்தவனே பறித்துவிட்டான்
மகளே! உன்னைப் பிரிந்து மூன்றாண்டுகள் சென்றதம்மா
எமதில்லம் நீ இல்லாமல் இருண்டதம்மா!
ஆழ்த்துயிலில் எம்மை ஆழ்த்திவிட்டு
நீ மீளாத் துயில் கொள்ள சென்றதெங்கே?
உன் நினைவில் உறக்கமின்றி
நாங்கள் தவியாய்த் தவிக்கின்றோம்.
அம்மா ரஜனி உன்னைப் பிரிந்து
அனைவரும் சிந்தை கலங்கி நிற்கின்றோம்.

உனது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தம்பி ரஞ்சித்,
[ரஜினி கிறீம் ஹவுஸ்]
உறவினர்கள், சுற்றத்தவர்கள்.

35, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி/2756)

# மக்கள் பார்வைக்கு

## ஆசிரியர் பெயர்ப் பட்டியல்

கொழும்பு, மே 29

25ஆயிரம் ஆசிரிய நியமனத் திட்டத்தின்கீழ் தெரிவாகும் ஆசிரியர் பெயர்ப் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக அந்தந்தப் பிரதேச உதவி அரச அதிபர் அலுவலகங்கள், பாடசாலைகள், கல்வி அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

தகுதியற்றவரின்பெயர் பட்டியலில் காணப்பட்டால் அது சம்பந்தமான ஆட்சேபனைகளை அமைச்சுக்குத் தெரிவிக்க முடியும் என்று கல்வி அமைச்சர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டார அண்மையில் செய்தியாளர் மாநாட்டில் சொன்னார்.

இத்தெரிவு சம்பந்தமாக எழுத்துமூலப் பரீட்சை எதுவும் நடத்தப்படமாட்டாது. மொழி, சமயம் ஆகியபாடங்களில் தகுதி பிரதானமாகக் கணிக்கப்படும்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் தேவைகளைப்பொறுத்து ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி, ஜி.சி.ஈ சாதாரணப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் மத்தியில் இருந்தும் தெரிவுகள் இடம்பெறும்.

இப்படி அமைச்சர் சொன்னார். [க-எ]

## படையினர் வெளியேற்றம்

முத்துஐயன்கட்டு வலது கரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த பல மாதங்களாக முகாமிட்டிருந்த இந்திய அமைதிப்படையினர் பாடசாலை வளவிலிருந்து வெளியேறி விட்டனர்.

பல மாதங்களாக படையினர் முகாமிட்டிருந்த காரணத்தால் பிரஸ்தாப பாடசாலை இயங்காமல் மாணவர்கள் நீண்டதூரம் சென்று வேறு பாடசாலைகளில் கல்வி கற்று வந்தனர். (ஒ-113

## புலமைப் பரிசிலுக்கான பணத்தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 29

ஆண்டு 5 மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் புலமைப் பரிசில் வருடாந்த பணத் தொகை ரூபா ஆயிரத்திலிருந்து ரூபா இரண்டாயிரமாக அதிகரிக்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் தொகையும் 1500 ரூபாவில் இருந்து 3000 ரூபாவாக அதிகரிக்கப்படும்

அதே நேரம் மாணவர்களுக்கான புத்தக அலவன்ஸும் அதிகரிக்கப்படும்.

இந்த விவரங்கள் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். (இ-21)

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு

கனேடிய அரசு யாழ்போதனா வைத்தியசாலைக்கு கடந்த வருடம் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை வழங்கியுள்ளது.

இத்தகவலை கனேடியத் தூதுவர் கரோலின் எம். மக்கஸ்கி உதயனுக்குத் தெரிவித்தார்.

மேற்படி வைத்தியசாலைகளின் தேவைகளைப் பொறுத்து மேலும் உதவ இருப்பதாக அவர் தெரிவித்தார்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 29

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்வி அதிகாரி திரு க. சிவநாயகமூர்த்தி கலந்துகொள்கிறார்.

1988 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவருக்கு விசேட பரிசில்களை வழங்கக் கூடிய ஏற்பாடுகளை பாடசாலை ஆசிரியர்களும் அபிவிருத்திச் சங்கத்தினரும் அதிபரும் செய்துள்ளனர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [இ-எ]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**M. R. மணிவண்ணன்**

மலர்வு:
11 - 03 - 1962

உதிர்வு:
29 - 05 - 1984

ஐந்தாண்டு கணப்பொழுதாய் மறைந்ததையா,
அன்புருவே 'ஆரமுதே அழகின் முத்தே
பைந்தமிழின் இன்சொல்லை மணிவண்ணத்தைப்
பால்வடியும் ஒளிமுகத்தைத் துள்ளியோடிப்
பந்தாடி மகிழ்வித்த இளமான் கன்றைப்
பாராது சிறகிழந்த பறவையானோம்.
எந் தவமே இறைவனடி மலரில் நாளும்
எமது துயர்க் கனல் தணிய இரந்து கேட்பாய்.

நின் பிரிவுத் துயரால் நெஞ்சுருகிக் கலங்கும்:
**அம்மா, தம்பி,**
**உற்றார், உறவினர்கள்.**

41, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்,

(சி/2660)

## 31 ஆம் நினைவஞ்சலி அழைப்பு



பிறப்பு:
16-10-1951

இறப்பு:
01-05-1989

**இராமநாயகே விக்ரமகே சுமணபாலா I. P**

அன்னார் 01-05-89 அன்று அகாலமரணமானார். அன்னாரின் 31 ஆம் நாள் நினைவுக் கிரிகைகள் 31-05-89 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு ''அமலகிரி'' பெரிய மாவடி லேன் சாவகச்சேரியில் நடைபெறும்.

இவ் அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அழைப்பாளர்கள்:
திருமதி துஷ்யந்தினி சுமணபாலா [குட்டி]
திரு. [illegible] சுமணபாலா

[11069]

## 10 வீதிகள் திருத்தப்படும்

காங்கேசன்துறை மே 29

வலிவடக்கு பிரதேசசபை எல்லைக்குள்மிகவும் சீர்கெட்ட நிலையிலுள்ள 10வீதிகளைப்புனரமைக்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

வலிவடக்கு பிரதேசசபை விசேஷ ஆணையாளர் திரு.வி இராசையா இந்த 10 வீதிகளையும்புனரமைக்கவேண்டிய ஏற்பாடுகளை செய்துஅவற்றை விரைவில் புனரமைக்கு மாறு யாழ் அரசாங்க அதிபருக்கு சிபார்சு செய்துள்ளார். (இ-68)

## மாணவர் விழா

கரவெட்டி, மே 29

வடமராட்சியில் இருந்து 1981 — 89 கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான ஆறுமாத கால ஆங்கிலப் பயிற்சி முடிவுற்றதை ஒட்டி வட இந்து மகளிர் கல்லூரியில் விழா ஒன்று நடைபெற்றது. இந்த விழாவில் 'லிடர்' என்ற ஆங்கில சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

விழாவுக்கு மாணவ மன்றத் தலைவன் க. கேதீசன் தலைமை வகித்தார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

'லடர்' சஞ்சிகையின் முதல் பிரதியை பட்டயக் கணக்காளர் திரு.சோமசுந்தரம்பிள்ளை புலோலி ப. நோ. கூ. ச. தலைவர் திரு. மாணிக்கவாசகரின் சார்பில் பொது முகாமையாளர் திரு.அருணகிரி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மன்றச் செயலாளர் சு. சபேசன் நன்றியுரை நிகழ்த்தினர். (க-70

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்:
25-10-1934

சிவனின் அடியில்:
29-04-1989

திதி: 29-05-1989

**கனகசபை கந்தசாமி**
(மன்னார் மக்கள் வங்கி பிரபல இலிகிதரும் தட்டெழுத்தாளரும்)

அப்பா! நீங்கள்

இல்லாத பிள்ளைகளாய் வாழ்வோம் நாம் என்று எண்ணவில்லை. ஆயினும் அதுதான் 'விதி' நமக்கு என ஆக்கி விட்டு சென்றுவிட்டீர்கள்! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த பிரிவு எமது குடும்பத்தாருக்கு பேரிழப்பாகவும் உள்ளதோடு உங்களது வேலை ஸ்தலத்தையே இயங்காத நிலையில் ஆக்கிவிட்டாய் தந்தையே! நீங்கள் உள்ளவரை அஞ்சாத நாம் இப்போது அஞ்சி உயிர் மடிகின்றோம்.

எங்களின் அருகில் அன்பு என்னும் பாலை ஊட்டும் எங்களது அம்மாவையும் பறித்து விடாதே. உங்கள் ஆத்மா சாந்தி அடைய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பிரார்த்திப்போமாக.

இறுதிச் சடங்கின்போது உதவிபுரிந்தவர்களுக்கும் (மக்கள் வங்கி ஊழியர்களுக்கும், மன்னார் செல்வம் பிறதர்ஸ்) எமது கவலையில் பங்கு எடுத்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

29-05-1989 (திங்கட்கிழமை) நடைபெற இருக்கும் வீட்டுக்கிரியைகளில் சலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி:- க. கனகமணி,
பிள்ளைகள்:- கலையரசி, கலைப்பிரியா, சலைப்பிருந்தா, கலையரசன், கலைவேந்தன்,
மைத்துனர்கள்:- S. பரமானந்தம், S. சண்முகநாதன்,
நண்பர்கள்.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

[807]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**நா. சிதம்பரநடராஜன் (பாவு)**

தாயின் மடியில்
06-02-1970

ஆண்டவன் மடியில்
29-05-1987

வருடங்கள் இரண்டு மறைந்தாலும் உன் நினைவு
மாறுது. எம் இதயம் அழுகிறது. ஆம்!
ஆலடியில் உன் உயிரை அடைவு வைத்தாயா? இல்லை
எம் நெஞ்சில் மாறுத வேதனையை
நிரந்தரமாக்கி விட்டாய் செல்வா!
மணக் கோலம் காண காத்திருந்தோம் ஆனால்
பிணக் கோலத்தை காட்டி அன்றே
தவிக்க வைத்து விட்டாய் செல்வா!
செல்வா! செல்வா! என்று எம்மை
தேட வைத்துவிட்ட எம் இதய
மன்னவனே! மறைந்தாயோ?
என்னாத நாள் இல்லை உன் மறைவின் நாட்களினை!
கண்கள் தரும் கண்ணீரும் கனல் பாய்ந்த நெஞ்சுடனும்
விண்ணில் நிறைந்திட்ட செல்வனுக்கு எம்
அஞ்சலிகள் என்றென்றும்!

உனது பிரிவால் துயருறும்
**அப்பா, அம்மா, அக்காமார்,**
**அண்ணன்மார், தம்பி,**
**தங்கை [சிவா],**
**உற்றார், உறவினர், நண்பர்கள்**

(809)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகன் இன்ஸ்ரிரியூட்
அச்சுவேலி
தூய பிரயோக கணிதம்
எல்லாப் பிரிவுகளும் நடைபெறுகின்றன.
திரு. நல்லையா
செல்வி. யோகம்
(11061)


# மாகாண சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவுள்ளோம்

## நாடாளுமன்றத்தில் காமினி

கொழும்பு, மே 29

அந்தந்த மாகாணங்களில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் மாகாண சபைகளுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்க இருக்கின்றோம். இதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

ஆகவே நாம் முன் ஏற்பாடாக இந்த அதிகாரங்களை வழங்குகின்றோம். இது ஒரு நியாயமான வழி ஆகும்.

தோட்டத் தொழில்துறை அமைச்சர் திரு. காமினி திஸநாயக்க நாடாளுமன்றத்தில் மாகாணசபை (பின் விளைவுகள்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்திய துருப்பினரை இங்கிருந்து எவ்வளவு விரைவாக அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவாக நாம் அனுப்பி வைப்போம்.

எமது நாட்டில் இரண்டு சந்ததியினர் யாழ்ப்பாணமோ, திருகோணமலையோ என்னவென்று தெரியாது வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் இன்று பேசிக்கொள்ளும் ஜனநாயகத்தின் வெளிக்கவர்ச்சி மீது மக்கள் அக்கறை கொள்வது இல்லை. நாம் எதை எதையோ பேசிக்கொள்ளுகின்றோம். அதிகார பரவலாக்கல் நடைமுறைக்கு வரவேண்டும்.

நீங்கள் பேசிக்கொள்ளும் ஒற்றுமை, இறைமை ஆகியவற்றை உருவாக்க இந்த சட்டத்தை ஆதரித்து எமக்கு உதவுங்கள்.

—இப்படி அமைச்சர் காமினி சொன்னார். (ஒ-ச)


குகன் இன்ஸ்ரிரியூட்
அச்சுவேலி
பொருளியல்: திரு. லோகசிங்கம்
AL. 1990. தேசிய வருமானம்
ஆரம்பம்: 1-06-1989
கணக்கியல்: திரு. கணேசலிங்கம்
A/L 1989 'கம்பனி' நடைபெறுகின்றது
(11062)



★ கம்பியூட்டர் கல்வி ★

COMPUTER PROGRAMMING IN d BASE IV (LATEST VERSION)

பயிற்சிக் காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 4 - 6 - 89 [சனி, ஞாயிறு வகுப்புகள்]

Lotus 1-2-3 ✶ Word Processing

பயிற்சிக் காலம்: 1 1/2 மாதம்
ஆரம்பம்: 6 - 6 - 89 [செவ்வாய், வியாழன்]
சேரும்போது செலுத்தவேண்டியது ரூபா 500/-மாத்திரம்.

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I.B.M. (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சிமுடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்யவும்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 03 - 06 - 1989




UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)
(சி/2624)



ஹொங்கொங் (HONGKONG) நாட்டில் உடனடி வேலைவாய்ப்புகள்

| | | ஹொங்கொங் பெறுமதி | இலங்கை பெறுமதி |
|---|---|---|---|
| 1. | மேசன் | 4000 HKG$ | 16,000/- |
| 2. | தச்சுத்தொழிலாளர்கள் | ,, | ,, |
| 2. | பைப் பிற்றேஸ் | ,, | ,, |
| 4. | எலெக்ரீசியன்கள் | ,, | ,, |
| 5. | சாரதிகள்(கனரகவாகனங்கள்) | 3500 HKG$ | 15,750/- |

மேற்கூறியவற்றுக்கு, 2 வருட ஒப்பந்தம் தங்குமிட வைத்திய செலவுகள் இலவசம். பாஸ்போட் அளவு 6 படங்கள், தகுதி சான்றிதழ்கள் சகிதம் நேரில் வரவும். (சாரதிகள் லைசென்ஸ் உடன் வரவும்.)

6. வீட்டுப் பணிப்பெண்கள் [House Maid]
பாஸ்போட் அளவு 4 படங்கள் முழு அளவு கலர் படம் ஒன்று சகிதம் நேரில் வரவும்.

தொடர்பு முகவரிகள்:
எலியாஸ் ஏபிரகாம்
1ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

46, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(கச்சேரிக்கு முன்பாக)
(சி]2753)

9/6, மலர்மகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.



ஜோசப் மோட்டார் வேக்ஸ்
யமஹா ஏஜன்சி 94, பிரதான வீதி.

பருத்தித்துறையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் அல்வாய் மேற்கு சக்கோட்டையில் எமது இல்லத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம், சிறந்த முறையில் அவுட்போட் இயந்திரங்கள் திருத்துதல் கிறுங் பிட்டிங் செய்தல் மற்றும் யமஹா உதிரிப் பாகங்கள் விற்பனை சகலவிதமான கடைச்சல்வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

ஜோசப் மோட்டார் வேக்ஸ்
அல்வாய் மேற்கு,
சக்கோட்டை.
(சி/2635)



"ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|---|
| 3 | மாதங்கள் | — | 15% |
| 6 | மாதங்கள் | 15% | 17% |
| 12 | மாதங்கள் | 18% | 20% |
| 24 | மாதங்கள் | 21% | 23% |
| 36 | — | 22% | 24% |

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,653 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | 6 |

நம்பிக்கையுடன் சேமிக்க
"ஷப்ரு"வை நாடுங்கள்
நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷப்ரு பொது அறிவுப் போட்டியில் ஹட்டன் ஹைலண்ட்ஸ் முதலிடம்

கொழும்பு, மே 29

ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரால் நுவரெலியா நல்லாயன் மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட மாவட்டத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு இடையேயான பொது அறிவுப்போட்டியில் ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இரு பிரிவுகளாக இப்போட்டி இம்மாதம் 11ஆம் 12ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இறுதி நாள் நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினர்களாக மத்தியமாகாண கல்வி அமைச்சர் திரு. எஸ். கே. இராமநாதன் ஷப்ரு யுனிக்கோ பிஞன்ஸ் நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் திரு. எஸ். பால சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரிக்கு ஸப்ரூ வெற்றிக்கேடயமும் 2 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டன.

இரண்டாம் இடத்தைப் பெற்ற நுவரெலியா நல்லாயன் மகளிர் கல்லூரிக்கு ஆயிரம் ரூபா பணம் பரிசாக வழங்கப்பட்டது.

இவை தவிர அரை இறுதிப் போட்டியில் பங்குபற்றிய நான்கு பாடசாலைகளுக்கும் ஒவ்வொரு சுவர்க் கடிகாரம் வழங்கப்பட்டது.

ஏனைய மாவட்டங்களிலும் இம்மாதிரியான போட்டிகளை தமிழிலும், சிங்களத்திலும் தனித்தனியே நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியில் வெற்றி பெறும் பாடசாலைகள், இறுதியாக அகில இலங்கை ரீதியில் கொழும்பில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்ற உள்ளன

1990ஆம் ஆண்டு முற்பகுதியில் ஷப்ரு நிறுவனத்தினரின் புதிய ஐந்து மாடிக்கட்டடத் திறப்பு விழாக் கொண்டாட்டங்களுடன் இணைந்து இந்த இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (இ-எ)

## யோகர் சுவாமி ஜயந்தி

யாழ்ப்பாணம், மே 29

யோகர் சுவாமிகளின் 117 ஆவது ஜயந்திதினம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கீரிமலை - யோகர் சுவாமி மகளிர் தவநிலையத்தில் கொண்டாடப்படும். (சு)

இலங்கை வங்கி கட்டுரைப் போட்டி:

## யாழ் மாணவர்களிடமிருந்து குறைந்த அளவு கட்டுரைகளே

யாழ்ப்பாணம், மே29

இலங்கை வங்கியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் மாணவர்களிடையே நடத்தப்படும் கட்டுரைப் போட்டிக்கு வடபகுதியில் இருந்து மிகக் குறைந்த அளவு மாணவர்களே கட்டுரைகளை அனுப்பியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரபலமான பாடசாலைகள்கூட இந்தக் கட்டுரைப் போட்டிக்குக் கட்டுரைகளை அனுப்பவில்லை என்று இலங்கைவங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதி நிலைமை காரணமாக கட்டுரைப் போட்டியின் முடிவுதிகதி இம்மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# கூட்டுறவு இயக்கம் சிறப்புற ஊழியர்களே முக்கிய காரணம்

### நலன் புரிச்சங்கக் கூட்டத்தில் உரை

காங்கேசன்துறை, மே 29.

"கூட்டுறவு இயக்கத்துடன் கூட்டுறவு ஊழியர்களும் இரண்டறக் கலந்து மக்கள் சேவையை நோக்காகக்கொண்டு செயற்படுவதால்தான் எமது பகுதியில் கூட்டுறவு இயக்கம் சிறப்புற்று விளங்குகிறது. கூட்டுறவு ஊழியர்களின் சேவை மனப்பான்மை பெரிதும் பாராட்டுதற்குரியது."

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துரையாற்றிய தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா மேற்கண்டவாறு கூறினார்.

நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. செ. பத்திநாதர் தலைமையில ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜ் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:

எந்த இயக்கமும் சுதந்திரமான முறையில் திட்டங்களைத்தீட்டி மக்களுக்கு உதவும் வகையில் அவற்றைச் செயற்படுத்தினால் அவற்றால் நல்ல பயன்களைப் பெற வாய்ப்பு ஏற்படும். கூட்டுறவுச் சங்கங்கள் சுதந்திரமாகச் செயற்பட வழிபிறந்தால் மக்களுக்குச் சிறப்பான சேவையை ஆற்றமுடியும்.

தற்போது கட்டுப்பாடுகள் இருந்தாலும் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்கி வருவது பாராட்டுதற்குரியது.

யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். லிங்கநாதன், பணியாளர் நலன் புரிச்சங்கச் செயலாளர் திரு. செ. கனகநாயகம், பொருளாளர் திரு. பூ. தங்கவடிவேல் ஆகியோரும் உரையாற்றினர்.

மேற்படி சங்கத்தில் பணியாளர்களாக இருந்து ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்ற திரு. அ. கிரிதரன், செல்வி த. சிவஞான கலாவல்லி ஆகியோர் கூட்டத்தில் பாராட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். (இ-68)

## இடமாற்றம்

அராலி மே 29

யாழ். மாவட்ட விவசாய இலாகாவில் மனையியல் பகுதி பொறுப்பாளராகக் கடமையாற்றிய திருமதி எஸ். சண்முகநாதன் வட்டுக்கோட்டைப் பகுதி விவசாய விஸ்தரிப்பு சேவையாளராக இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளார். (ச-12)

## சென். பெனடிக் பாடசாலையில்

அரியாலை, மே 29

நல்லூர் சென். பெனடிக் வித்தியாசாலையில் இலவச மதிய உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் முதற் தடவையாக உணவு வழங்கப்பட்டது. (இ-18)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சின்னத்தம்பி கனகரெத்தினம்

மலர்வு: 6- 11- 1932

உதிர்வு: 16- 6- 1982

நினைவு நாள் திதி: 29- 05- 1989

எங்கள் இதயக் கோவிலில் வீற்றிருக்கும் அன்புத் தெய்வமாகிய அப்பாவுக்கு எங்கள் நினைவு மலர்களும் அஞ்சலிகளும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன். (அருண்)

140, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(11088)

சுஜேரா ரவல்ஸ்

★ வெற்றிடங்கள் ★

சவூதி அரேபியா (Saudi Arabia)

HOUSE MAIDS பெண்கள்
LABOURERS ஆண்கள்
CLEANERS ஆண்கள்

தைவான் (Taiwan)

தைவானுக்குப் போக விரும்புவோர் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும். ஆங்கில அறிவுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மூன்று கிழமைகளில் அனுப்பிவைக்கப்படுவார்கள்

ஜேர்மனி (Germany) க்குப் பிரயாணம் செய்ய விரும்புவோர் (16 வயதிற்கு உட்பட்டவர்களும் மேற்பட்டவர்களும்) தாமதியாது எங்கள் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சுஜேரா ரவல்ஸ்
21, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம்.

(C/2650)

பிரயாண ஒழுங்குகள்
உடனடி வேலைவாய்ப்புகள்

★ குவைத்

| | |
|---|---|
| றைவேர்ஸ் H. V. | 75 K.D. |
| வீட்டு றைவேர்ஸ் | 60 K.D. |
| சுப்பர்வைசர்ஸ் | 75 K.D. |
| அலுமினிய தொழிற்சாலை லேபரர்ஸ் | 70 K.D. |

★ சவூதி அரேபியா

| | |
|---|---|
| றைவேர்ஸ் | 650 S R. |
| லேபரர்ஸ் (கிளீனிங்) | 45 S R. (அல்ராஜ்) |
| காப்பென்ரேர்ஸ் | 650 S.R. |
| மேசன்ஸ் | 700 S.R. |
| இலக்ரிசன்ஸ் | 800 S.B. |
| வெல்டேர்ஸ் | 700 S.R. |

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்பு:-

நியூயோர்க் ரவல்ஸ்
K. K. S. வீதி,
மல்லாகம்.

[சி-2638]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 16-03-1964

இறப்பு: 29-05-1985

திதி: 29-05-1989

இரத்தினம் சதானந்தன்
(பிரசன்னு)

உன் ஆசை நிறைவு பெறமுன் யமனே! உன் உயிரை கவர்ந்து விட்டான்! உன்சேவை ஞாலத்தில் மிகப்பெரிது! உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால்வாடும்:
அப்பா, அம்மா, தம்பிமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

118 D. 10
உருத்திரபுரம்.

(688)

சுகமான வாழ்வு பெற விரைந்திடுவீர்

நியூ பார்மேட் டிஸ்ரிபியூடர்ஸ்

★ WARNER LAMBERT LANKA L. T. D
★ HEMAS (DRUGS) L. T. D
★ MACK WOODS L. T. D
★ FARNELL CEYLON L. T. D
★ LANKA MEDICAL (Import) L. T. D
★ A.BAUR & CO.

இக் கம்பனிகளின் அதிகாரம் பெற்ற வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

நியூ பார்மேட் டிஸ்ரிபியூடர்ஸ்
128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் மொத்த விலையில் பார்மஸி சேஜிகல் பொருள்களும் விற்பனைக்குண்டு.

(C/2614)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன் சுப்பிரமணியம்
புவனேஸ்வரன்

அன்னை மடியில்: 17-12-1971

இறைவன் அடியில்: 29-04-1989

அழகாய்ப் பிறந்து, அன்புடன் வளர்ந்து, பண்புடன் பழகி நல்லறிவு வழி நின்று தாயார், தந்தையார் உடன்பிறந்தார், சுற்றத்தார் திகைத்து மனம் கலங்க இறைவனடி சேர்ந்தாய். எங்கள் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

உமது பிரிவால் துயருறும்:
தாய் புஷ்பராணி, தந்தை சுப்பிரமணியம்,
சகோதரர்கள், சாந்தன் அத்தான், அக்கா,
சித்தப்பாமார், சித்திமார், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மட்டுவில் நாடு,

(804)

## 45 ஆவது நாள் நினைவஞ்சலி



செல்லையா சிவகுமார் (ஜெயா)

மண்ணில்: 22- 07- 1967

விண்ணில்: 15- 4- 1989

அன்புத் தெய்வமே, பாசத்தின் இருப்பிடமே! மாறாத அன்பில் எம்மை மகிழ வைத்த அன்புத் தெய்வமே! திடீரென மீளாத்துயில் கொண்டது ஏனோ? எம் அன்புத் தெய்வ மகனே உம் எழில் முகத்தை எப்போ காண்போம்

உங்கள் பிரிவால் வாடும்,
அன்புத் தாய், தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

[812]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

**பொருள்:**

மருத்துவ நூலைக் கற்றவன், நோயுற்றவனுடைய வயது, முதலியவற்றையும் நோயின் அளவையும் காலத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: தொலைபேசி 24805 22073

29 - 05 - 1989 தை: பெர: இல: 8

## அந்தச் சாபக்கேடு உள்ளவரை...!

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புச் சம்பந்தமான உத்தேச சர்வஜன வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்படும் என்பது அனேகமாக நிச்சயமாகி விட்டது. வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நாடாளுமன்றத்தில் இதனை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதியுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்தும் அது ஊர்ஜிதமாகி இருக்கிறது.

வடக்கு - கிழக்கு இணைப்பைச் சோதிக்கும் வாக்கெடுப்பு இப்போதைக்கு நடக்காது என்பதில் தமிழ் மக்களுக்கு ஒரு சிறு ஆறுதல். ஆனாலும் எப்போதோ ஒரு வேளை வாக்கெடுப்பு மூலம், வேண்டாத தூண்டுதல்கள், உட்சதிகள் மூலம் இணைப்புப் பூட்டு உடைக்கப்படும் சாத்தியம் உண்டு என்ற நிலை அரசியல் அச்சத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள். அவர்கள் தமது தனித்துவத்தைப் பேண, அந்தத் தாயகம் தேவைப்படுகிறது. தமிழர்களின் அரசியல் பிரச்சினையின் அடிப்படை இதுவே. இதனைச் சற்றும் புரிந்து கொள்ளும் நிலையில் சிங்கள அரசியல்வாதிகள் இன்னும் மனமாற்றம் அடையவில்லை.

நாடு கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக, பல சோதனைகளையும். வேதனைகளையும் அனுபவித்த பின்னரும், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் எண்ணக்கருவை சிங்கள அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளவில்லை என்பது தமிழர்களுக்கு மனப்புண்ணை ஏற்படுத்துவதாகும்.

தமிழ் மக்களின் அந்தப் பிரதம அபிலாஷையை, சிங்களத் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று கூறுவதைவிட, புரிந்து கொண்டும் அதனை வழங்கத் தாராள மனம் இல்லாமல் தடுத்துவிடக் கங்கணங் கட்டி நிற்கிறார்கள் என்பதே உண்மை!

இணைப்புச்சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்புஒத்திவைக்கப்படலாம் என்று அறிவித்த அதே வாயால், இணைப்புக்கு எதிராகச் செயற்பட எல்லாக் (சிங்களக்) கட்சிகளையும் இணையுமாறு கேட்டிருக்கிறார் அமைச்சர் ரஞ்சன். இது எதனைப் பிரதிபலிக்கிறது? தமிழர்கள் தமது பிரதான இலட்சியத்தை அடைய விட்டுவிடக் கூடாது என்ற உள்ளார்ந்தத்தை உணர்த்துகிறது.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கையோடு, அதனை எதிர்த்துத் தாம் பிரசாரம் செய்யப்போவதாக அறிவித்த முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையே திரு. விஜேரத்ன பிரதி பண்ணி நிற்கிறார்! அவர் என்ன? ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இணைப்புக்கு எதிராகப் பிரசாரம் செய்ய வரிந்து கட்டிவிட்ட நிலையில், முன்னர் திரு. ஜே. ஆர். சொன்னதை ஞாபகப்படுத்தி, அவரையும் அழைத்திருக்கிறார்.

எவர் எதைச் சொன்னாலும், எப்படி நோக்கினாலும், தமிழர்களின் உரிமைகள் அபிலாஷைகள் விடயத்தில், சிங்களத் தலைவர்கள் ஒரே அச்சில் வார்த்த வெவ்வேறு நிறப் பொம்மைகள் தான். தமிழர் பிரச்சினையைத் தீர்த்து நாட்டினைக் கட்டி எழுப்பி வளர்க்க வேண்டும் என்ற தேசிய பற்று அவர்களில் எவரிடமும் இருப்பதாக இல்லை. நேரத்துக்கு ஏற்றாற் போல, பேரினவாதம் போன்ற குறுகிய காய்களை வைத்து உருட்டி, அரசியல் விளையாட்டை நடத்தித் தமது அரசியல் வாழ்க்கையைச் செழிப்படையச் செய்வதே எல்லோரது எண்ணமுமாக உள்ளது!

இது இந்த நாட்டின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைக்கும் பெரும் சாபக்கேடு. நாட்டில் இரத்தக் களரியையும், குழப்பத்தையும் உண்டாக்கும் ஊழ்வினை.

இந்தச் சாபக்கேடு சிங்கள அரசியல்வாதிகளை விட்டு அகலவேண்டும். அப்போது தான் இந்த நாடு சீர்பெறும், சிறப்பு அடையும். மக்கள் சாந்தியையும், சமாதானத்தையும், அமைதியையும் அனுபவிக்க முடியும். இல்லையேல் எல்லாவகைகளாலும் நாடு கூனிக் குறுகி, குட்டிச் சுவராக நேரிடும்.

● அமெரிக்க - பிரான்ஸ்

## அணு ஆயுத தகவல் பரிமாற்றம் 15 வருட இரகசியம் அம்பலம்

வாஷிங்டன், மே. 28

கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பிரான்ஸுக்கு அணு ரகசியங்களை ரகசியமாக வழங்கி வந்ததை அமெரிக்க அரசு ஒப்புக் கொண்டது.

ரொக்கட் தயாரிப்பது, சோவியத் எவுகணை பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைவது, அணு ஆயுதங்கள் உற்பத்தி ஆகிய துறைகளிலான இரகசியங்களே பிரான்ஸுக்கு அமெரிக்காவினால் இரகசியமாக வழங்கப்பட்டு வந்தது என்று சஞ்சிகை ஒன்றில் கட்டுரை வெளியானது.

இது சட்ட விரோதமான செயல் என்று அக்கட்டுரையில் கூறப்பட்டிருந்தது.

இப்படியான அணுசக்தித் தகவல் பரிமாற்றத்தை அமெரிக்கா பிரிட்டனுடன் மட்டுமே பகிரங்கமாக நடத்தி வந்தது.

பிரான்ஸுடனான ரகசியப் பரிமாற்றம் ஆயுதக் குறைப்புப் பற்றிய சோவியத்துடனான பேச்சுக்களுக்குக் குந்தகம் விளைவிக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. (எ)

● ஆளும் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில்

## நிறவேற்றுமை ஒழிப்புக் கொள்கை; தென் ஆபிரிக்க அரசாங்கம் அறிவிப்பு

ரோம், மே 28

நிறவேற்றுமையை ஒழிக்க உறுதிபூண்டிருப்பதாக தென் ஆபிரிக்க அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

தென் ஆபிரிக்க அரசமைப்பில் வெள்ளையரின் ஆதிக்கத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரிட்டோரிய அரசு தெரிவித்தது.

வருகிற பொதுத்தேர்தலில் தென்ஆபிரிக்காவில் ஆட்சி நடத்தும் தற்போதைய ஆளும் கட்சி இந்தக் கொள்கையை முன்வைத்தே போட்டியிடவுள்ளது.

இத்தகவல்களைத் தென்ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக்போத்தா ரோமில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரிடம் தெரிவித்தார்.

வியன்னாவில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில் இரண்டு அமைச்சர்களும் ரோமில் சந்தித்துக் கொண்டனர்.

தென் ஆபிரிக்காவில் நிறவேற்றுமைக்கு எதிராகத் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் தொடர்ந்து அமுலாக்கப்படும் என்றும் தென்ஆபிரிக்கஅமைச்சர் தெரிவித்தார். (எ)

● நைஜீரியாவில்

## அரசு எதிர்ப்புக் கிளர்ச்சியில் அறுநூறு கைதிகள் தப்பினர்

பெனிம், மே 28

நைஜீரியாவில் பெனிம் நகரில் அரசு எதிர்ப்புக் கலவரம் ஏற்பட்டது. அதில் 3 பேர் மரணமடைந்தனர்.

அரசின் பொருளாதாரச் சிக்கன நடவடிக்கையைக் கண்டித்து இக்கிளர்ச்சி மூன்று தினங்களாக நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக் கட்டடங்களைச் சேதமாக்கினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இரண்டு சிறைகளைப் பலாத்காரமாக உடைத்து 600 கைதிகளை விடுவித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்ட இடத்தில் சுடும்படி நைஜீரிய அரசு இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளது. (எ

150 பயணிகளுடன்

## அமெரிக்க விமானம் கடத்தல் கியூபா இளைஞன் கைது!

மியாமி, மே 28

அமெரிக்காவில் டல்லஸ் விமானநிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று கியூபா இளைஞன் ஒருவனால் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்டது.

அச்சமயம் 150 பயணிகள் விமானத்தில் இருந்தனர்.

கியூபாவுக்கு விமானத்தைக் கொண்டுபோகும்படி விமானிக்கு உத்தரவிட்டான் இளைஞன்.

ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக விமானம் மியாமியில் இறக்கப்பட்டது.

விமானத்தைச் சூழ்ந்து கொண்ட மத்திய புலனாய்வு அதிகாரிகள் கடத்திய கியூபா இளைஞனைக் கைதுசெய்தனர்.

## சீன மாணவர் போராட்டம் மக்கள் ஆதரவில் தளர்வு

பீகிங், மே 28

பீகிங்நகரில் இன்று சுமார் 10 ஆயிரம் சீனமாணவர் ஜனநாயக உரிமைகள்கோரி ஆர்ப்பாட்டம்ஒன்றை நடத்தினர்.

வருகிற செவ்வாய்க்கிழமையுடன் தியனமன் சதுக்கத்தில் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று மாணவர்கள் அறிவித்தனா.

இதன் மத்தியில் இன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னர்போன்று மக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றவில்லை.

மாணவர் இயக்கத்துக்கு எதிரானவர்களின் கட்டுப்பாட்டுக்குள் சீன அரசுத் தலைமைப்பீடம் வந்துவிட்டதைத் தொடர்ந்தே இத்தளர்வு காணப்பட்டதாகக் கூறப்பட்டது. [எ]

## பி.பி.சி.செய்திக்கு பிரிட்டன் மறுப்பு

லண்டன், மே 28

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜிப்ரி ஹோ பி. பி. சி. செய்தி ஒன்றுக்கு மறுப்புத் தெரிவித்தார். லண்டனில் இருந்து 11 சோவியத் ராஜதந்திரிகள் மற்றும் பத்திரிகையாளரை பிரிட்டிஷ் அரசு வெளியேற்றியது அல்லவா!

அதற்குக் காரணம் அவர்கள் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர்கள் சிலரை 'பிளாக்மெயில்' செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டதே என்று பி.பி.சி. தெரிவித்தது.

இதையே பிரிட்டிஷ் அரசு மறுத்திருக்கிறது.

## தேசிய முன்னணியில் கலைஞர் கருணாநிதியின் நிலை சென்னையில் வி. பி. சிங். விளக்கம்!

சென்னை, மே. 28

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய முன்னணி கடைப்பிடிக்கவேண்டிய உத்திகள் பற்றி முன்னணித் தலைவர்கள் திரு. வி. பி. சிங், திரு. பிஜு பட்நாயக், திரு. பி. உபேந்திரா ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை முதலமைச்சர் கருணாநிதியுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

முடிவில் திரு. வி. பி. சிங் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது;

தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பது பற்றியே பேச்சுக்கள் அமைந்தன. இதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

பொதுச் சின்னம் ஒன்றின் கீழ் தேசிய முன்னணியில் உள்ள கட்சிகள் போட்டியிடுவது பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் அதில் முன்னேற்றம் காணப்பட்டதா என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.

இக்கட்டத்தில் முதலமைச்சர் கருணாநிதி தலையிட்டு "பொதுச் சின்னம் பற்றிய பிரச்சினை விவாதத்துக்கு வரவில்லை" — என்று சொன்னார்.

கேள்வி: மத்திய அரசுக்கு எதிரான சடும்போக்கைக் கலைஞர் தளர்த்திவிட்டார் என்று நீங்கள் உணரவில்லையா?

வி பி. சிங்: இது அல்ல பிரச்சினை. கருணாநிதிக்கு எதிரான நிலைப்பாட்டை ராஜீவும் தளர்த்தவில்லை.

தெலுங்கு தேசக் கட்சி உபதலைவர் உபேந்திரா:

பஞ்சாயத்து சட்டம் பற்றிக் கலைஞர் ராஜீவுக்குக் கடுமையான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் அல்லவா!

வி. பி. சிங்: தேசிய முன்னணியின் தலைமைப்பீடத்தின் கூட்டம் வருகிற ஜூன் மாதம் 6 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி நிச்சயம் கலந்துகொள்வார்".

## பிறமொழி அறிஞர் அடுத்த பிறப்பில் தமிழராய் பிறக்க விரும்புகின்றனர்

### தமிழ்த் தின விழாவில் விரிவுரையாளர் உரை

யாழ்ப்பாணம், மே 29

'தமிழ் மொழியை ஆய்வு செய்த மேல்நாட்டுப் பிறமொழி அறிஞர்கள் தமது மொழிக்கு இத்தனை சிறந்த இலக்கியம் இல்லையே என்று வருத்தம் தெரிவித்து உள்ளனர். தாம் அடுத்த பிறப்பில் தமிழராகப் பிறக்கவேண்டுமென்ற தமது ஆவலையும் வெளிப்படுத்தியுள்ளனர்.'

'மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற்ற தமிழ் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ் பல்கலைக் கழக கல்வித்துறை விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்,

கல்லூரி அதிபர் திரு. அ. மு. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் உப அதிபர் திரு.ஆ.கல்யாணசுந்தரேசன் வரவேற்புரை நிகழ்த்தினார்,

கலாநிதி சபா. ஜெயராசா தமது உரையில் மேலும் கூறியதாவது:-

'தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் நன்கு கற்கவேண்டும். தமிழ் இலக்கியத்தை தனி ஒரு பாடமாக மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது.

தமிழ் இலக்கணம் தனித்துவமானது. புதுமையானது, என்றும் பயன்படத்தக்கது.

இனிய ஒரு பொருள் பற்றிய ஆய்வே இலக்கண ஆய்வு. ஒரு மொழியைச் செம்மையாகப் புரிந்துகொள்வதற்குஇலக்கணம் உதவும். எனவே தமிழ் மாணவர்கள் இலக்கணத்தை நன்கு கற்றுத்தேறவேண்டும்,

தொல்காப்பியமே தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூலாகும், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கருத்தை வலியுறுத்தும் தேசிய இலக்கியம் திருக்குறளாகும். சிலப்பதிகாரம் சிறந்த ஒரு வணிக இலக்கியமாகும்.

மொழிவளம், கவிதை நயம், இலக்கியச்சுவை மிகுந்த நூல் கம்பராமாயணம். வெளிநாட்டு அறிஞர்களும் கம்பராமாயணத்தை ஆராய்ச்சி செய்து போற்றியுள்ளனர். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த தமிழ் இலக்கியங்களைப் படித்துப் பயன்பெற நம் தமிழ் மாணவர்கள் முன்வரவேண்டும்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி தனதுரையில், "தமிழ் மொழியில் உள்ள சிறந்த பல இலக்கியங்கள் அழிந்துபோகக் கூடிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. எனவே அவற்றைப் பேணிப் பாதுகாக்கத் தமிழர்கள் முன்வரவேண்டும்."

இப்படி அவர் கூறினார்.

மயிலணி மகாவித்தியாலய அதிபர் கவிஞர் திரு: கே. துரைசிங்கம் தலைமையில் மாணவ, மாணவிகளின் கவியரங்கம் இடம்பெற்றது.

ஆசிரியர் என். பாலகிருஷ்ணன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திருமதி வை. ஜே.பி. மூர்த்தியின் இன்னிசை விருந்தும் இடம்பெற்றது.

நாடக ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசனால்நெறிப்படுத்தப்பட்ட நயவஞ்சனை, செஞ்சோற்றுக் கடன், குமணன், திருந்திய கணவன் ஆகிய நாடகங்கள் மாணவர்களால் மேடையேற்றப்பட்டன.

திரு. என், கணேசமூர்த்தி நன்றி நவின்றார். (இ-ச)

## மாணவரின் படிப்புக்கு உடல் ஆரோக்கியம் அவசியம்

### காங்கேசன்துறை கல்வி அதிகாரிஉரை

பண்டத்தரிப்பு, மே 29

உயர்கல்வி கற்ற மாணவனுக்கு உடல் ஆரோக்கியம் இன்றியமையாதது. நல்ல முன்னேற்றத்தைக் கல்வியில் காணவும் ஆளுமைத்தலைமைத்துவம் பொறுப்புணர்ச்சிஆகியவற்றைப் பெறவும் விளையாட்டுப் போட்டிகள் பயிற்சியளிக்கின்றன'.

காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப, சண்முகராசா மாதகல் நுணசை வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. வே. சேனாதிராசா தலைமையில் ஆசிரியர் திரு. தி. சிவராஜன் ஒழுங்கமைப்பில் விளையாட்டுப் போட்டிகள் நடந்தன.

போட்டிகளில் சோழஇல்லம் முதலாம் இடத்தையும், பாண்டியன் இல்லம் இரண்டாம் இடத்தையும், சேரஇல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

சமூகசேவையாளர் திரு.ஆ. பொன்னம்பலம், முன்னாள் அதிபர் திரு. ஆ. செல்லையா ஆகியோர் விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். (க-120)

## நாயன்மாரின் திருமுறைகளை தினமும் நாம் ஓத வேண்டும்

### அப்பர் விழாவில் அதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 29

'நாயன்மார்களின்திருமுறைகளைத் தினமும் நாம் ஓதுதல் வேண்டும். சிவபெருமானை நம்பி வாழுதல் வேண்டும். அப்போது ஒரு குறைவும் வராது. குழந்தைகளைச் சைவமாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். சைவத்திற்குத் தொண்டுசெய்ய யாவரும் முன்வரவேண்டும். அப்பரின்தொண்டை நினைவுகூர்ந்து அவர்வழி நின்று யாம் தொண்டாற்றுவோம்'.

கல்வி அதிகாரி திரு. க.மகேசன் மண்டைதீவு வீரபத்திர சுவாமி மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபரும், சைவளர்ச்சிக்கழகத் தலைவருமான திரு. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற திருநாவுக்கரசர் குருபூசை விழாவில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

செயலாளர் திரு. த. சிவபரம்சோதி வரவேற்புரை நிகழ்த்தினார் திரு. இ. வரதன் நன்றி கூறினார். (க)

### நாகபூஷணி அம்மன் திருவிழா

வேலணை, மே 29

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் யூன் மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 ஆம் திகதி இரவு கைலைக் காட்சியும் 13 ஆம் திகதி பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், 14 ஆம் திகதி பகல் சிவபூசை கைலைக்காட்சியும், 15 ஆம் திகதி பகல் வாயுபட்சணி நாகம் வீதி உலா காட்சியும், 17 ஆம் திகதி பகல் கைலைக் காட்சியும், இரவு சப்பரமும், 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி காலை 6 00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இரவு திருவூஞ்சலும், 20 ஆம் திகதி தெப்பத் திருவிழாவும் விசேஷ திருவிழாக்களாக நடைபெறவுள்ளது

மஹோற்சவ காலத்தில் பகல் திருவிழா காலை 8 முதல் 1 மணிவரையும் இரவுத் திருவிழா மாலை 5.00 முதல் 9 மணிவரையும் நடைபெறும். அடியார்கள் தமது அடையாள அட்டையுடன் அல்லது தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகளுடன் வருதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-16]

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 29

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் ஜூன் மாகம் 7 ஆம் திகதி காலை 10.55 முதல் 11.45 வரை நடைபெறும். (க)

### கரம்பன் வேளாங்கண்ணி திருவிழா

யாழ்ப்பாணம், மே 29

கரம்பன் அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத் தல திருவிழா 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை 30 ஆம் திகதி நற்கருணைத் திருவிழாவும் 31 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு யாழ் ஆயர் அவர்களின் கூட்டுத் திருப்பலியாசத் திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

தினமும் மாலை 5 மணிக்குத் திருச் செபமாலையும் மறையுரைகளும் திருப்பலியும் இடம்பெற்று வருகின்றன. மறையுரைகளை இ. ஜே. அருமைநாயகம் அடிகள் வழங்கி வழி நடத்துகிறார்.

இறுதி மூன்றுநாள் மறையுரைகளையும் அருட் திரு. ஜீவாப்போல் அடிகள் வழங்குவார். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KAILAS CATARRA OIL**

**கைலாஸ் பீனிஸ் தைலம்**

இது கண், காது, மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு, ஓயாத தும்மல், கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற (21) வகையான பீனிஸ் வகைகளுக்கு நிவாரணம் தரும்.

4 அ, போத்தல் விலை ரூபா 20/

கிடைக்கும் இடம்:-

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்

76, பெரியகடை யாழ்ப்பாணம். போன்: 2313



# உதயன்

29 - 05 - 1989 திங்கட்கிழமை



**தென்னை மரக்குடி எண்ணை**

கை கால் சுளுக்கு, எலும்பு முறிவு, மூட்டு நழுவுதல், வாயு மூச்சுப் பிடிப்பு, அடிபட்ட வீக்கம் ரத்தக் கட்டு, முதுகுவலி முதலியன வற்றுக்குச் சிறந்தது.

1 சீசா போத்தல் விலை ரூபா 16/-

கிடைக்கும் இடம்;-

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்


## தோட்ட துரைமாருக்கு பாதுகாப்பு

கொழும்பு, மே 29

மலையகத் தோட்டங்களின் துரைமார் உதவித் துரைமார் ஆகியோருக்கு தீவிர பாதுகாப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தோட்டப்பகுதிகளில் அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, (ஒ-எ)

## முகாம்களுக்கு மக்கள் செல்லக்கூடாது என்று விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 29

இந்திய, இலங்கை இராணுவ முகாம்களுக்கும், தொண்டர்படை முகாம்களுக்கும் பொதுமக்கள் போவதைத் தடை செய்வது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, எக்காரணங்களைக் கொண்டும் எவரும் இந்த முகாம்களுக்கு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

'இன்று எம்மில் சிலர் தமக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இராணுவ, தொண்டர்படை முகாம்களை அணுகுகின்றனர். இதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இன்று எமது மக்களுக்குள் ஏற்படும் சிவில் வழக்குகளைத் தீர்ப்பதற்கு எவ்வித ஏற்பாடுகளும் இல்லை என்பதும் எமக்குத் தெரியாததல்ல. இருந்தும் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்களிடமே சென்று பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவது அனுமதிக்கமுடியாத ஒன்று' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தடை உத்தரவு கிராம சேவகர்களுக்கும் பொருந்தும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். கச்சேரி வளவுக்குள் இயங்கும் இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், இல்லையேல் இயங்க அனுமதிக்கப்பட்டிருக்கும் அத்தியாவசியப் பிரிவுகளையாவது இராணுவ முகாம் அண்மையில் இல்லாத இடத்துக்கு இடம் மாற்றம் செய்யுமாறும் கச்சேரி நிர்வாகத்தை புலிகள் இயக்கத்தினர் அந்த அறிக்கை மூலம் கேட்டுள்ளனர்.

## ஷப்ருவும் சென்றலைட்டும் வெற்றி

யாழ்ப்பாணம், மே 29

ஷப்ரு நிதிநிறுவனத்தின் ஆதரவில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிகெட் போட்டியில் நேற்றுக்காலை நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட் (நீல) அணியை எதிர்த்து ஆடிய ஷப்ரு அணி வெற்றி பெற்றது.

மாலை நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் கொக்குவில்சனசமூக நிலைய அணியை எதிர்த்து ஆடிய சென்றலைட் (சொக்) அணிவெற்றி ஈட்டியது. (ஒ-6)

## நெல்லியடியில் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், மே 29

ஜனாதிபதி சுற்றுக் கிண்ணத்திற்காக நடத்தப்படும் இன்டர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் பருத்தித்துறைத் தெரிவுக் கோஷ்டிக்கும், கிளிநொச்சித் தெரிவுக் கோஷ்டிக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் பருத்தித்துறை தெரிவுக் கோஷ்டி வெற்றியீட்டியது.

கிளிநொச்சியில் நடைபெற்ற இப்போட்டிக்கு ஏ. எஸ். குணரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார்.

பருத்தித்துறை தெரிவுக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையிலான போட்டி இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். [க-6]

## அரிசி ஆலை தொழிலாளர்கள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்

### மாகாணசபை உறுப்பினர் பேச்சு

வவுனியா, மே 29

அரிசி ஆலை உரிமையாளர்கள் தொழிலாளர்களை ஈவிரக்கமின்றி வேலை வாங்குகிறார்கள். இந்த நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மாகாண அரசின் மூலம் வெகு விரைவில் மேற்கொள்ள இருக்கிறேன்.

இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு. ப. சிவரத்தினம்.

வன்னி மாவட்ட அரிசி ஆலைத் தொழிலாளர்கள் பொதுக் கூட்டம் வவுனியா மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்து திரு. சிவரத்தினம் பேசியதாவது:-

கடந்த இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் இன்று நாட்டின் பல பாகங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை யாரும் அச்சுறுத்தவோ, இங்கிருந்துவிரட்டியடிக்கவோ அனுமதிக்க முடியாது.

அரசியல் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக இவர்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்குக் கை கொடுத்து உதவ வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இவ்வாறு அவர் கூறினார்.

ஈழத் தொழிற் சங்க சம்மேளன அமைப்பாளர் திரு. வி. ஏ. கந்தசாமி தமது உரையின்போது, தொழில் சட்டப்படி தொழிலாளர்களுக்கான வேலை நேரம் எட்டு மணித்தியாலங்களே ஆகும். அரிசி ஆலைகளில் தொழிலாளர்களிடம் பத்து பன்னிரண்டு மணித்தியாலங்கள் வேலை வாங்கப்படுகிறது. தொடர்ச்சியாக இரவுநேரங்களில் பெண்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பத்து வருடங்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கூட இதுவரையும் சேம லாப நிதி கட்டப்படுவதில்லை- என்றார்.

கூட்டத்தில் வன்னி மாவட்டத் தொழிற் சங்க அமைப்பாளர் என். எஸ். சிவக்கொழுந்து அன்னலட்சுமி, மாலினி. நவாஸ், கணபதிப்பிள்ளை இராசகோபால் உட்பட பலர் உரையாற்றினர். (ஒ-164)

## பனாமா நெருக்கடி

பனாமா அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண தென் அமெரிக்க நாடுகள் அமைப்பு தவறிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பனாமாவில் அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மோசடி இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் முடிவு ரத்துச் செய்யப்பட்டது.

ஆனால் அமெரிக்கா, பனாமா ராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோவை பதவி விலகும்படி நிர்ப்பந்தித்து வருகிறது.

இதனால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணவே தென் அமெரிக்க நாடுகள் அமைப்பின் கூட்டம் நடந்தது. (எ

### வடக்கு, கிழக்கு இணைப்பு:

## எம்மவர் கொல்லப்பட்டாலும் பிரசாரத்தை தொடர்வோம்

### சபையில் சிறிமாவோ அறிவிப்பு

கொழும்பு, மே 29

எம்மவர் கொல்லப்பட்டாலும் அஞ்சாது வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுவதை எதிர்த்து தீவிரமாகப் பிரசாரம் செய்வோம்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இதனை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாகாண சபைகள் (பின்விளைவுகள்) சட்ட மூலம் மீதான விவாதத்தின்போது திருமதி பண்டாரநாயக்கா மேலும் பேசுகையில், சுதந்திரக் கட்சியினர் போன்று தற்போதைய ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதியும் இணைப்பை எதிர்த்துத் தீவிரப் பிரசாரம் செய்ய முன்வருவார்கள் என்று நம்புவதாக தெரிவித்தார். (ஒ-எ)

### நட்புறவு-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலவை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் மு... யான பதில் இந்தியாவிடமிருந்து கிடைக்கவில்லை.

நகல் உடன்படிக்கைக்கு இந்திய தரப்பில் இருந்து சில திருத்தங்களைச் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றும் அப்பேச்சாளர் சொன்னார். (அ-எ)


## 4 ஆம் வருட நினைவஞ்சலி



**செல்வன் இராஜேந்திரா சிவஜீவன்**

(பபா)

மலர்வு: 13-09-1968

உதிர்வு: 29-05-1985

எம் மக்கள் பட்ட இன்னல் கண்டு  
போராட்டத்தில் நேசம் கொண்டு  
விடுதலை வேட்கையுடன் செயற்பட்ட  
எம் செல்வமே பபா!  
வீணை மீட்டிய விரல்களைத் தந்தி  
வீணே அறுத்ததையா!  
காலங்கள் பலவாயிரம் மாறினும்  
காயம் ஆறுதையா!  
ஓலங்கள் நிதம் உள்ளத்தில் எழும்  
உணர்வுகள் மாறுதையா!  
ஆயிரமாயிரம் கண்ணீர்தாரைகள்  
அஞ்சலி ஆனதையா!

என்றும் உன் பிரிவால் வாடும்

அப்பா, அம்மா, அண்ணா, தங்கை,  
உற்றார், உறவினர்கள்,  
தோழர்கள்.

(11089)


## ஐ. நா. அதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 29

ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரியாக கடமையாற்றிய திரு. போஜர் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

அவரின் இடத்துக்கு திரு. சொலமன் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். [ஒ-3]


## அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அனுபவம் உள்ள அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை. திறமைக்கும் அனுபவத்துக்கும் ஏற்பச் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பத்திரிகைகளில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண்கள், பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இன்று (திங்கட்கிழமை) காலை விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),  
நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிரைவேட்] லிமிட்டெட்,  
292/2 நாவலர் வீதி,  
யாழ்ப்பாணம்

# ACCOUNTANCY CLASS

## NOV - DEC 1989

**C. I. M. A** STAGE I

BATCH I - 27 5- 1989  
BATCH II - 05- 6- 1989

**A. A. T** (LONDON)

PRELIM. 27- 05- 1989

**C. I. M. A**

STAGE II - 03- 06- 1989  
STAGE II - 03- 06- 1989

**A.A.T** [SRI LANKA]

STAGE J 30- 06- 1989

**I. D. P .M**

PART I - 27- 05 - 1989

**I. A. B** FOUNDATION

BATCH I 27- 05- 1989  
BATCH II 05- 06- 1989

**I. D. P. M**

PART II - 10- 06 -1989

**I. A B**

INTER & FINAL 10- 06- 1989

OUR PANEL INCLUDES

(Mr. R N. Varendiran, Mr. K. NanthaKumaran, Mr. . Mahendiran, Mr. S. Thilakakumar, Mr. K. Kamalakumar. Mr. S. Narendiran, Mr. D. Gnanaseelan)

CONTACT

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**  
14, St, PETERS LANE,  
HOSPITAL ROAD,  
JAFFNA

(சி/2758)

# PERSONAL CLASSES

B. M. C. முன்லேன் - யாழ்ப்பாணம்.

## A/L 89 DAY CLASSES

(Mon to Fri)

Physics திரு. சத்தியசீலன் B. Sc (Cey)  
8.30 - 9.30 a. m. M. C. Q.  
ஆரம்பம்: 29 - 05 - 89

Zoology திரு. ஈஸ்வரதாசன் B.Sc (Cey)  
10.30 - 11.30 a.m. பொருளாதார விலங்கியல் (மீட்டல்)  
11.30 - 12.30 p.m. சூழலியல்  
ஆரம்பம்: 31 - 05 - 89

● குறிப்பு: A/L 89 Batch இற்கு Physics முழு பாடத்திட்டமும் முடிக்கப்பட்டு விட்டதால் முற்றிலும் வினாவிடை வகுப்புகள் நடைபெறுகிறது.

விபரங்கள் நேரில்

[சி-2669]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மரியம்மா அல்போன்சஸ்

திருமதி மரியம்மா அல்போன்சஸ் (இளைப்பாறிய ஆசிரியை, சென்பற்றிக்ஸ் கல்லூரி) 27-05-89 இல் காலமானார்.

இவர் திரு. S. F அல்போன்சஸ் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அன்ரன், ஜஸ்ரின், ஜோய், ஜெனற், ரூஜதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-05-89) திங்கள் பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து (இல; 5, கதீற்ரல் வீதி, யாழ்ப்பாணம்.) கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(813) அன்புக் கணவர் S. F. அல்போன்சஸ்

### திரு. ஆறுமுகம் சிவகுரு

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பராய் கிழக்கை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திரு. ஆ. சிவகுரு அவர்கள் 28- 05- 89 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி திலகம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற திருமதி பரமேஸ்வரி, திருமதி புவனேஸ்வரி, திரு. சி. கதிரவேலு (ஆசிரியர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), திருமதிகள் கேதாரேஸ்வரி, பூமணி, தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. த. சின்னத்துரை (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்), காலஞ்சென்ற திரு. க. தம்பித்துரை (ஆசிரியர்), திருமதி. பத்மாதேவி (ஆசிரியை, உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை), திரு. செ. முத்துக்குமாரசாமி (குமரன் ஸ்ரோஸ், மல்கெலியா), திரு. வே. பேரின்பநாதன் (மாதகல்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 29- 05- 89 இன்று பகல் 3.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: [redacted]

சிவஸ்ரீ. இ. நவரத்தினக்குருக்கள்,  
(மைத்துனர்)

கற்புலம் வீதி,  
உரும்பராய் கிழக்கு,  
உரும்பராய்.

(11091)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 29—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org